REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER


T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 21 | சுன்னாகம், விகிர்தி பங்குனி ௧௮ 1-4-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 82) | இதழ் 35

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான
கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள்
மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள்
விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

# செந்தமிழ் வளர்த்த தேசபக்தன்

## 'ஈழகேசரி'யின் தந்தை பொன்னையா அவர்களின் வாழ்க்கை வரலாறு

வானந் துளங்கிலென் மண்கம்ப
மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு
மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர்
வீழிலென் வேலைநஞ்சுண்
டுனமொன் றில்லா வொருவனுக்
காட்பட்ட வுத்தமர்க்கே.

யாழ்ப்பாணம், குரும்பசிட்டியில் ஒரு சாதாரண குடும்பத்திற் பிறந்து தமது சுய முயற்சியால் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்த இவருக்கு இறக்கும் பொழுது வயது 59.

தமது கிராமத்திலுள்ள அமெரிக்க மிஷன் பாடசாலையிற் கல்வியை ஆரம்பித்த திரு. நா. பொன்னையா அவர்கள் அக்காலத்துத் தமது குடும்ப நிலைமைக் கேற்ப ஆரம்பக் கல்வியுடன் தமது பாடசாலைக் கல்வியை நிறுத்தி விவசாயத்தை மேற்கொண்டார்.


இவர் தந்தையார் திரு. ப. நாகமுத்தர் அவர்களுக்கு இரண்டு பெண்களும், இரண்டு ஆண்களுமாக நால்வர் மக்கள் இருந்தனர். அவருள் இவர் நான்காவது — கடைசிப் — புதல்வராக நந்தன வரு ஆனி மீ 22 உ பிறந்தார்.

### பத்திரிகை ஆர்வம்

அசாத்தியத் துணிவும், உயர்ந்த மனப்போக்கும் வாய்ந்த திரு. பொன்னையா அவர்கள் விவசாயத்தில் அதிக நாட்டங் கொள்ளாது பத்திரிகை படிப்பதில் ஆர்வங்கொண்டு அச்சுத் தொழில் கற்க விரும்பி, அக்காலத்து 'சுதேச நாட்டியம்' என்னும் பத்திரிகையை நடாத்தி வந்த வயாவிளான் திரு. க. வேலுப்பிள்ளை அவர்களது அச்சுக்கூடத்தில் அச்சுத்தொழில் கற்றுக் கொண்டார். பின்னர் குரும்பசிட்டியை ஜெனன ஊராகக் கொண்டவரும் யாழ்ப்பாணநகரில் 'தேசாபிமானி' என்னும் பத்திரிகையை நடத்திவந்தவருமாகிய நல்லையா அன்ட் சன்ஸ் அவர்களது பத்திரிகாலயத்தில் தொழிலாற்றினார். அக்காலத்துத் தமிழில் போதிய ஆற்றல் பெற்றார்.

பின் 1910-ம் ஆண்டு கழுத்துறையில் உள்ள ஒரு வியாபார ஸ்தலத்தில் மனேஜராகக் கடமையாற்றி உலக மகாயுத்த காலத்தில் (1914) தாமே ஒரு வியாபார ஸ்தலத்தை நிர்வகித்து நடத்தி வந்தார்.

இவர் 1918-ம் ஆண்டு ஐப்பசி மீ தமது மாமனாராகும் திரு. கதிரிப்பிள்ளை அவர்களின் கனிஷ்டபுத்திரி மீனாட்சியம்மாளை மணந்து ஒரு புதல்வனையும் மூன்று புதல்வியரையும் பெற்றனர். இந்நான்கு மக்களுள் நவகுமார் எனப் பெயரிய புதல்வனும், தனலக்குமி, திலகவதி எனப் பெயரிய இரு புதல்வியரும் இளமையில் காலமாயினர். சௌபாக்கியவதி புனிதவதியாரே இவரது செல்வப் புதல்வியாக இன்று விளங்குகின்றார்.



திரு. நா. பொன்னையா, ஜே. பி.

தோற்றம் 22-6-1892 மறைவு 30-3-1951

**எங்கள் பத்திரிகையின் அதிபரும், பிரதம ஆசிரியரும், திருமகள் அழுத்தகம், தனலக்குமி புத்தகசாலை என்பவற்றின் சொந்தக்காரருமான திரு. நா பொன்னையா அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை (30-3-51) அதிகாலையில் இறைவனடி எய்திய செய்தியை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.**

### தேசியப் பற்று

1918-ம் ஆண்டில் இவர் றங்கூன், பர்மா, மலாயா முதலிய இடங்களுக்குச் சென்றார். 1920-ம் ஆண்டு கிழக்கு றங்கூன் 92-ம் வீதியிலிருந்து வெளிவந்த 'சுதேச மித்திரன்' பத்திரிகையில் உதவி ஆசிரியராகி அதில் அநுபவமும் ஆற்றலும் அடைந்தார். அக்காலத்தில் இந்தியாவில் நடைபெற்று வந்த தேசீய இயக்கங்களில் ஆர்வம் காட்டிக் கதர், தேசீய சுதந்திரம் என்பவற்றிற் பற்றுடையவரானார். இந்தியாவில் (சென்னை) சிலகாலம் வசித்து சை. வி. வி. சங்கக் காரியதரிசி திரு. S. இராசரத்தினம் அவர்களது சகோதரர் திரு. கதிரேசபிள்ளை அவர்களுடன்சேர்ந்து தந்திச் சுருக் கெழுத்துத் திரட்டு (Telegraphic Code) என்னும் வியாபார தந்திநூற் புத்தகத்தை ஆக்குவதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்

1925-ம் ஆண்டு றங்கூனை விட்டுத் தம் சுய நாடடைந்த திரு. பொன்னையா அவர்கள் தெல்லிப்பழையில் திரு. யேசுதாசன் அவர்களை அதிபராகக்கொண்டு நடைபெற்று வந்த அமெரிக்க மிஷன் அச்சியந்திரசாலையில் தொழிலாற்றினார். அப்போது அப் பாடசாலையிற் கைத்தொழில் ஆசிரியராகவும் கடமை ஆற்றினார். அக்காலத்துப் புன்னாலைக்கட்டுவன், மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்பால் தமிழ் கற்று யாழ்ப்பாணம் ஆரிய—திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பிரவேச பண்டித பரீக்ஷையிற் சித்தியடைந்தார். பின் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீக்ஷையிலும் சித்தியடைந்தார். ஆயினும் 1926-ம் ஆண்டு ஆவணி மீ சுன்னாகத்தில் ஒரு புத்தகசாலையை ஆரம்பித்தமையால் அவர் ஆசிரியகலாசாலையிற் சேரவிரும்பவில்லை. 1929-ல் திருமகள் அழுத்தகம் என்னும் பெயர் வாய்ந்த ஒரு அச்சுக்கூடத்தையும் ஸ்தாபித்தார். இவற்றின் பயனாய் 1930-ம் ஆண்டு ஜூன் மீ 22உ சேர் பொன். இராமநாதனின் திரச்செயல் ஞாபகமாக, யோகர் சுவாமி அவர்கள் ஆசியுடன் 'ஈழகேசரி' வாரப்பதிப்பை ஆரம்பித்தார். அதனை நல்ல முறையில் நிர்வகித்து 1935-ம் ஆண்டு தொடக்கம் தென்னிந்திய பத்திரிகை விசேஷ மலர்களுக்கு எவ்விதத்திலும் இளைக்காத, 'ஈழகேசரி' ஆண்டுமலர்களை உயர்ந்த முறையில் வெளியிட்டுத் தமிழ் நாட்டின் நன்மதிப்பைப் பெற்றார்.

1933-ம் ஆண்டில் 'Ceylon Patriot' என்னும் ஆங்கில வார வெளியீட்டைத் தலையாளி திரு. எஸ். ஸி. சிதம்பரநாதன் என்பவரை ஆசிரியராகக்கொண்டு சிலகாலம் நடாத்தி வந்தார்.

### தொல்காப்பியப் பதிப்பு

1935 ம் ஆண்டில் பாடசாலைப் புஸ்தகங்களும் உயர்தர தமிழ் நூல்களும் மிகச் சிறந்த அழகிய முறையில் எவரும் வியக்கத்தக்கதாகத் திருமகள் அழுத்தகத்தில் பதிப்பித்து வெளியிட்டார். அப்பொழுது (1939) தமிழிலக்கணத்தில் மிகத்தொன்மையானதும் உயர்தரமானதுமான தொல் காப்பியத்தின் எழுத்ததிகாரத்தை மகா வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் உரை விளக்கக் குறிப்புக்களுடன் ராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் ஞாபகார்த்தமாகப் பதிப்பித்து வெளியிட்டார். அதைத் தொடர்ந்து சொல், பொருள் அதிகாரங்களும் தமிழ் நாட்டுக்கே சிறப்பைத் தரும்முறையிற் பதிப்பிக்கப்பட்டு உயர்தரமாக வெளிவந்தன. இதனால் திருமகள் அழுத்தகம் ஈடில்லாப் புகழ் பெற, நல்லூர் வண. சுவாமி ஞானப்பிரகாசர் O. M. I. அவர்கள் தமது சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் – ஆங்கில அகராதியை (An Etymological and Comparative Lexicon of the Tamil Language) திருமகள் அழுத்தகத்தில் பதிப்பிக்க முன்வந்தார். அதில் முதல் 6 பகுதிகளும் மிகச் சிறந்த முறையில் உயரிய வெளியீடாக வெளிவந்துள்ளன.

1941 ம் ஆண்டு கேசரி (Kesari) என்னும் உயர்தர ஆங்கில வார வெளியீட்டை, எஸ். ஏச். பேரின்பநாயகம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு ஆரம்பித்துச் சில வருடங்கள் சிறப்புற நடாத்தினர்.

### பொதுசன சேவை

பொதுஜன சேவையில் ஆர்வமும், இந்திய தேசீயத் தலைவர்களின் சேவையில் பிரேமையும் உள்ள திரு பொன்னையா அவர்கள் மகாத்மா காந்தி அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்த காலம் தொட்டு அரசியலில் தேசீய நோக்குடன் ஈடுபட்டார். அதன் பயனாய் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வாலிப மகாநாட்டின் முன்னணி அங்கத்தினராகி வாலிபமகாநாட்டுவிழாக்கள் சிறப்புடன் நடைபெறுவதற்கு மூல புருஷராய் இலங்கையின் சுதந்தரத்துக்காக உழைத்தார். திரு. பேரின்பநாயகம் அவர்களைத் தமது அரசியல் குரு என இவர் பல சந்தர்ப்பங்களிற் சொல்லியுள்ளார்.

பொதுஜனசேவா ஆர்வத்தால் மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கம், கூட்டுறவுச் சங்கங்கள் முதலியவற்றிற் பெரும்பங்கெடுத்து எவ்வித ஊதியமும் பெறாது உழைத்து வந்தார்.

பீஹார் பூகம்ப நிவாரண நிதி, பாரதி மண்டப நிதி முதலியவற்றிற்கு ஈழகேசரி மூலம் பணம் சேர்த்து அனுப்புவதில் பெரு முயற்சி எடுத்துக்கொண்டார்.

### விவசாயப் புரட்சி

தமது கிராம மக்களின் சேவைக்காக 1936-ம் ஆண்டு தொடங்கிக் கிராமசங்க அங்கத்தவராய்க் கடமையாற்றி 1946-ம் ஆண்டு தொடக்கம் இறக்கும் வரையும் மயிலிட்டிக் கிராமச்சங்கத் தலைவராகக் கடமையாற்றி வந்தார்.

இரண்டாவது மகா யுத்தம் ஏற்பட்டுஉணவுப்பஞ்சம் தலைவிரித்தாடிய காலத்தில் (1941) வயாவிளானில் ஏறக்குறைய 12 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தை விலைக்கு வாங்கி யந்திரசாதன உதவியுடன் பெருமளவில் உணவுப் பொருள் விருத்திசெய்து யாழ்ப்பாணத்தில் ஒரு விவசாயப் புரட்சியை ஏற்படுத்தினார். அவ் விவசாயப் பண்ணை யாழ்ப்பாண விவசாயிகளுக்கும், அரசாங்கப் பகுதிக்கும் பல புது அநுபவங்களை உண்டாக்கியது. அவ்விடத்தில் ஒரு கைத்தொழிற் பாடசாலையைத் தமது பொறுப்பில் நடத்திவர முயற்சிகள் செய்யும் போது, அரசினர் கேள்விக்கியைந்து அவ்விடத்தை மத்திய பாடசாலை உபயோகத்துக்காகக் கையளித்தார். அதன் கட்டிட நிதிக்காக ரூபா பதினாயிரம் நன்கொடை ஈந்தார்.

### நாட்டின் தொண்டன்

தமது சொந்த ஊராகிய குரும்பசிட்டியில் சன்மார்க்க சபை என்னும் பெயருடைய ஒரு சங்கத்தை நிறுவி (1934)

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

## ஊர் வதந்தி

கொண்டோடி

- சிங்களமுந் தமிழும் அரசாங்க மொழிகளாக வேண்டுமாம்.
- பேராசிரியர் இரத்தின சூரியா இதற்குப் போதரவு அளிக்கின்றாராம்.
- பிரதமர் சேனநாயகா இதை வெறும் பித்தலாட்டமென்கின்றாராம்.
- பித்தந் தெளியப் பிரதமர் மருந்துங் கூறியுள்ளாராம்.
- தேசிய மொழிகள் மெல்ல மெல்ல ஆட்சி புரிவதே புத்திசாதுரிய மானதாம்.
- இத்துறையிற் புத்தி கூறப் பிரதமர் ஒரு நிரந்தரசபையை ஏற்படுத்துவாராம்.
- சபையை ஏற்படுத்துவது தட்டிக்கழிக்கும் யுக்தியாம்.
- தேசிய மொழிப் பிரச்சினையை 'பைசல்' செய்யும் சக்தி பிரதமருக்கு இல்லையாம்.
- இதற்காகச் சபையை ஏற்படுத்தித் தப்பிக் கொள்ளப் பார்க்கின்றாராம்.
- அங்குந்தப்பி இங்குந்தப்பி அவஸ்தைப் படுபவர்களும் இருக்கின்றார்களாம்.
- தண்ணீர்க் கஷ்டமும் ஓர் அவஸ்தையாம்.
- தாகத்தைத் தணிக்கத் தண்ணீர் அவசியமாம்.
- ஆங்கிலத் தாகம் தினே தினே அதிகரிக்கிறதாம்.
- அனுராதபுரத்துக் கல்வி அதிகாரிகளே இதைக் கண்டு பிடித்தார்களாம்.
- வடமத்திய மாகாணத்திற்றான் ஆங்கிலத்தாகம் தலை தூக்கி நிற்கின்றதாம்.
- இப் பகுதியிலே தேசிய மொழிப் பற்றுக் குறைந்து வருகின்றதாம்.
- குறையை நிறைவாக்குஞ் சக்தி இலவசக் கல்விக்கு இருக்கின்றதாம்.
- ஏழைக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி வரப் பிரசாதமாம்.
- ஆங்கில மொழியை ஏழைப் பிள்ளைகள் அமுதம் போல் அருந்துகின்றார்களாம்.
- ஆங்கிலப் பள்ளிக்கூடங்களிற் பிள்ளைகளின் தொகை அதிகரித்து விட்டதாம்.
- பணம் படைத்த பிள்ளைகளை இங்கெல்லாம் படையெடுக்கின்றனராம்.
- பணமில்லாதவர்களே தாய் மொழி பயில்கின்றனராம்.
- ஆங்கில மொழி பயில்வதற்கு அனுராதபுரிப் பகுதிப் பள்ளிக்கூடங்களில் நேரம் போதாதாம்.
- அங்குள்ள ஆங்கில ஆசிரியர்கள் தரத்திற் குறைந்தவர்களாம்.
- இதைக் கேட்டு அந்த ஆசிரியர்கள் முழக்கியடிக்கக் கூடுமாம்.
- மின்னுமல் முழங்காமற் போராபத்து உண்டாகுமாம்.
- கண்டிப்பகுதியில் உள்ள கிரிமெடியாத் தோட்டத்தை மின்னல் தாக்கிற்றும்.
- தொழிலாளர்களின் முப்பது குழந்தைகள் இவ் விபத்துக்குள்ளாயினவாம்.
- ஒரு குழந்தை அக்கணமே மாண்டு விட்டதாம்.
- பௌத்த பிக்குவும் மின்னல் தாக்குதலுக்குப் பலியானாராம்.
- பண்டுராக் கொடையில் இந்த ஆபத்து உண்டாயிற்றும்.
- பிக்கு கோயிலைச் சுத்தம் செய்து கொண்டிருக்கையில் மின்னலாலே தாக்குண்டாராம்.
- தாக்கி எழுதுவதும் ஒரு கலையாம்.
- தாக்கும்போது காலைத் தூக்குவது ஒரு சிலரின் பண்பாம்!

## திருக்கேதீஸ்வரத்தின் மகிமை

### சைவாசிரிய கலாசாலை மாணவர் யாத்திரை

'அவப்பொழுதிலும் தவப் பொழுது நன்று' எனக் கருதிய திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை அதிபரும் மாணவரில் ஒரு பகுதியினரும் 'ஈஸ்டர்' விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கையிலே பாடல் பெற்ற தலங்களுளொன்றாய மிகப் புராதன—புண்ணிய தலமாக மிளிரும் திருக்கேதீசுவரத்திற்கு யாத்திரை செய்தனர். அந்த யாத்திரை செய்த நாளும், பங்குனி யுத்தரமும் பூரணைத் திதியும் பெரிய வெள்ளியும் ஒருங்கமைந்த சைவ – பௌத்த – கிறிஸ்தவ சமயத்தாருக்கெல்லாம் பொதுவாகவுள்ள ஒரு புண்ணிய புனிதமான பெருநாளாயிற்று.

#### பாலாவி

திருக்கேதீசுவரத்தின் புண்ணிய தீர்த்தமாக விளங்குவது பாலாவியாகும். யாவரும் இதில் தீர்த்தமாடித் திருக்கேதீஸ்வரப் பெருமானையும் கௌரியம்மையாரையும் வழிபட்டனர். அப்போது ஓர் அற்புதமான அதிசயத்தைக் கண்டு ஆனந்தமடைந்தனர். அதுதான் கௌரியம்மையாரின் பூசையைக் காணவரும் புனிதமான நாக சர்ப்பம். இச் சர்ப்பம் கௌரியம்மையாருக்குத் தீபாராதனை செய்யத் திரை நீக்கஞ் செய்யுந் தருணத்தில், எதிரேயுள்ள வாசலின் வளையில் திடீரெனத் தோன்றி வளைந்து சுருண்டு தன்னுடம்பை ஒரு சங்கின் வடிவமாக்கி, மண்டலமிட்டுப் படமெடுத்தவண்ணம் தொழுது கொண்டிருந்தது. பூசை முடிந்ததும் போய்விட்டது. எங்கு போனது என்பதை யாருமறியார். இவ்வதிசயத்தைக் கண்டதும் யாவரும் பிரமித்து விட்டனர். விசாரித்தபோது இது வழக்கமாக நடைபெறுகின்றதென்பது புலனாயிற்று.

#### ஆராய்ச்சி

திருக்கேதீசுவரத்தில் இப்போது புதைபொருள் ஆராய்ச்சி நடைபெறுகின்றது. இவ்வாராய்ச்சிக்கு அவ்விடத்தில் தலைவராகத் திரு. எஸ். சண்முகநாதன் அவர்கள் கடமையாற்றி வருகின்றார்.

#### திருமடம்

திருக்கேதீசுவர ஆலயத்தின் முன்பாகமாக அமைந்துள்ளது திருஞானசம்பந்த சுவாமிகள் திருமடமாகும். இத் திருமடம் ஆயிரக்கணக்கானோர் தங்குவதற்கேற்ற தனிமடமாக இருக்கின்றது. இத் திருமடம் திருக்கேதீசுவர ஆலயத் திருப்பணிச் சபையாராலும், திரு. செல்லப்பா சுவாமிகளது பெருந்தொண்டாலும் ஆனது. இத் தேவாலயமும், திருமடமும் சேர்ந்து மாபெரும் பாலைவனத்தின்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)


சகல பயிர்களுக்கு

C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்

C C C

கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல 33. டெலிபோன் இல. 5351.

[4271]

ஐரோப்பா யாத்திரை

கடந்த மகா யுத்தத்தில் இப்பட்டினம் பல குண்டுகளினால் தாக்குண்டு அதிக சேதம் அடைந்திருக்கின்றது. ஆகவே விடில்லா நெருக்கடி இங்கே அதிகம் உண்டு.

# மாபெரும் நகரசபை

## உவெஸ்ற்மினிஸ்றர் முன்மாதிரி

[சென்றவாரத் தொடர்ச்சி]

அடுத்த நாட் காலை (26-9-50) கிறினிச் என்றவிடத்திலுள்ள நூதனசாலையைப் பார்த்தேன். இங்கே உள்ள மாதிரிக் கப்பல் தொகுதிக்கு ஓர் அளவில்லை. பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த சேர் பிரான்சிஸ் ட்றேக் முதலியோர் என்னவிதமான கப்பலில் அன்று உலகத்தைச் சுற்றிவந்தாரோ அதைப் போன்ற மாதிரிக் கப்பல்களும், நெல்சன் பிரபு (லோட் நெல்சன்) என்ன உடை அணிந்து 1805-ம் ஆண்டு யுத்தத்தில் மாண்டாரோ அதே யுத்த உடையும் அங்கே கண்ணாடி அலமாரிகளிற் காட்சியளிக்கின்றன. நெல்சன் அணிந்த உடையில் வெடிகுண்டு பட்டு உண்டான துவாரம் எல்லாரும் காணத்தக்க விதமாக வைக்கப்பட்டிருக்கின்றது. நமது தமிழ் மன்னருடைய கிரீடங்களும் உடைவாள்களும் இன்று எங்கே? இன்னும் இந்த நூதன பொருட்சாலையிற் பல பழைய புத்தகங்களும் பன்னூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன் உபயோகிக்கப்பட்ட யந்திரங்களும் படங்களும் அழகாக வைக்கப்பெற்றிருக்கின்றன.

26-9-50 இரவு ஆங்கிலச் சங்கத்தின் பிரதிநிதி எல். எஸ். எல்ரன் அவர்களுடன் ஒரு நாடகம் பார்க்கச் சென்றேன். ஆங்கிலேயருடைய நாடகங்கள் தமிழருடைய நாடகங்களைப் போல் நீண்டனவல்ல. நாடகப் பாத்திரங்களும் திறமையுடன் நடிக்கின்றனர். நாடகம் குறிக்கப்பட்ட நேரத்துக்குச் சரியாகத் தொடங்கி ஒன்றரை அல்லது இரண்டு மணித்தியாலத்திற் குறித்த நேரத்துக்கு முடிவடையும். நாடகம் முடியும் போது எல்லாரும் எழுந்து நின்று மன்னனை வாழ்த்துவார்கள். இங்கிலாந்தில் இராசபக்தி இன்றுந்தான் குன்றாது இருந்து வருகின்றது.

### வின்சர் கோட்டை

அடுத்த நாள் (27-9-50) வின்சர் கோட்டை பார்க்கச் சென்றேன். இந்தக் கோட்டையில் அரசனும் இராணியும் இப்போதும் ஒருவருஷத்தில் ஒரு மாதத்திற்குத் தங்கியிருப்பது வழக்கம். இங்கே மதில்களிற் பழைய பீரங்கிகளுடன் புதிய பீரங்கிகளும் வைக்கப் பெற்றிருக்கின்றன. ஒரு பழைய கிறிஸ்தவ கோயில் இங்கே உண்டு. அரசன் கொலுவீற்றிருக்கும் மண்டபமும் பிரபுக்களை வரவேற்கும் மண்டபமும் விருந்தினரை உபசரிக்கும் மண்டபமும் மிக அழகாக அலங்கரிக்கப்பெற்றிருக்கின்றன. இமைகொட்

வழக்கறிஞர்
— அ. அருளம்பலம் —

டாது நிற்கும் காவற்காரர்களும் பன்னிறச் சட்டைகளை அணிந்த ஏவலாளர்களும் கோட்டையைச் சிறப்புறச் செய்கின்றனர். கோட்டையில் அரசனுடைய பிறவிடுதி என்றும் இராணியின் பாவை வீடு என்றும் இரு நூதனசாலைகள் உண்டு. இவற்றில் பல விலை உயர்ந்த பொருட்களும் ஆபரணங்களும் இருக்கின்றன. கோட்டை ஓர் உயர்ந்த பீடபூமியில் எழிலுடன் காட்சி அளிக்கின்றது.

மறுநாள் (28-9-50) காலை ஹொறஸ் பிளங்கற் என்று சொல்லப்படும் கூட்டுறவு ஸ்தாபனத்திற்குச் சென்று அதன் காரியதரிசியாகிய மார்கறற் டிக்பி என்ற அம்மையாரைச் சந்தித்தேன். சுவீடின் முதலாம் தேசங்களுக்குச் சென்று நான் பார்க்க வேண்டிய கூட்டுறவுச் சங்கங்களின் விபரத்தையும் அறிமுகப் பத்திரங்களையும் அம்மையார் எனக்குத் தந்தார். அம்மையார் கூட்டுறவு இயக்கத்திற் பல வருஷங்களாகச் சலியாது உழைத்ததுமன்றிப் பல நூல்களும் எழுதியிருக்கின்றார். இவருடன் அளவளாவுவதே பெரிய படிப்பாக இருந்தது.

### பிரபல நூலாசிரியர்

இந்த இடத்திற்கு அருகாமையில் ஒரு விசேஷமான பழைய கட்டிடம் இருக்கின்றது. இது 'டவுற்றி'த் தெருவில் 48-ம் இலக்கம் கொண்ட வீடு. இதில் 'சார்ல்ஸ் டிக்கின்ஸ்' என்னும் பெரிய ஆங்கில நூலாசிரியர் 1837-ம் ஆண்டு தொடக்கம் 1839-ம் ஆண்டு வரை வசித்தார். 'பிக் விக்' சமாச்சாரம், 'ஒலிவர் ருவிஸ்ற்' முதலிய நூல்களை இந்த வீட்டிலிருந்தே 'டிக்கின்ஸ்' எழுதி முடித்தார். இந்த வீட்டில் டிக்கின்ஸ் எழுதிய புத்தகங்களின் கைப்பிரதிகளும், முதல் பிரசுரமான அச்சுப் பிரதிகளும், பாவித்த மேசை, நாற்காலி, பேனை முதலியனவும் பொன் போற் போற்றப் பட்டுப் பாதுகாத்து வைக்கப் பெற்றிருக்கின்றன. எமது தமிழ்ப் புலவர்கள் எழுதிய ஏட்டுப் பிரதிகள் எங்கே? அவர்கள் இருந்து வளர்ந்து வந்த இல்லங்கள் எங்கே? "நாங்கள் ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்றோம்." எமது தமிழ்ப் புலவர்களுக்கும் தமிழ் மொழிக்கும் நாம் ஏதாவது செய்யவேண்டாமா?

### நகர சபை

அடுத்த நாள் (29-9-50) உவெஸ்ற்மினிஸ்றர் நகர சபையைப் பார்க்கச் சென்றேன். இங்கிலாந்திலுள்ள மிகப் பெரிய நகரசங்கம் இதுவேயாகும். சுமார் ஒரு கோடி மக்கள் இப்பட்டினத்தில் வசிக்கின்றார்கள். அதாவது இங்கிலாந்திலுள்ள மக்களில் நான்கிலொருபகுதியினர் இங்கேவசிக்கின்றனர். பகலில் இப்பட்டினத்தில் உத்தியோகம் தொழில் காரணமாக இங்கே பலர் வருவார்கள். ஆனால் பொழுது அஸ்தமிக்கவும் ஏறக்குறைய 20 லட்சம் சனங்கள் பட்டினத்திலிருந்து நாட்டுப்புறத்திற்குச் செல்கின்றார்கள். காரணம் பட்டினத்தில் தங்குவதற்குத் தகுந்த வசதிகள் இல்லாமையேயாகும். இந்த நகர சபை சனங்கள் குளிப்பதற்காகப் பல இடங்களிலும் தண்ணீர்த் தொட்டிகளும், கேணிகளும் கட்டி வைத்திருக்கின்றது. குளிர் காலத்தில் இவ்விடங்களில் வெந்நீர் மக்களின் உபயோகிப்புக்குக் கொடுபடுகின்றது. மேலும் இச்சபை உடுபுடவை முதலியனவற்றைத் தோய்த்து உடனுக்குடன் உலர்த்துவதற்கான ஒழுங்குகள் செய்திருக்கின்றது. இன்னும் இச்சபை, மக்கள் நீந்திவிளையாடுவதற்கேற்ற செய்கைத் தடாகங்களை அமைத்திருக்கின்றது. இவற்றைச் சுத்தமாக வைத்திருப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகள் சுகாதார முறைப்படி செய்யப்பட்டிருக்கின்றன. தடாகத்தின் ஒரப்புறத்திலும் குளிப்பவர்கள் உடுப்பு மாற்றுவதற்குத் தகுந்த சிறு அறைகள் இருக்கின்றன. அழுக்கைக் கழுவுவதற்கும் ஈரத்தைத் துவட்டுவதற்கும் சவர்க்காரமும் துவாயும் கொடுக்கின்றார்கள். இவற்றிற்காகக் குளிப்பவர்கள் சொற்ப பணம் கொடுக்கவேண்டும். ஆனால் பல வீடுகளில் குளிக்க வசதியில்லாத பிரித்தானிய மக்களுக்கு நகரசபையின் இந்த நீர்நிலையங்கள் அதிக வசதி அளிக்கின்றன.

### பெரிய வேலை

இப்பட்டினத்தைத் துப்புரவாக வைத்திருப்பது நகர சபைக்கு ஒரு பெரிய வேலையாகும். தினமும் சேரும் குப்பையிற் காகிதம் மாத்திரம் பன்னூற்றுக்கணக்கான தொன் நிறை இருக்கின்றது. இதில் அதிகம் அழுக்கு இல்லாதனவற்றை யந்திர மூலம் தெரிந்து தனியாக எடுத்துக் காகிதம் செய்யும் ஆலைக்கு மறுபடியும் அனுப்புகின்றார்கள். சமையல் அறையிலிருந்து வெளியாகும் எஞ்சிய உணவுப் பொருள்களையும் காய் கறித் தோல் முதலியனவற்றையும் புறம்பாக எடுத்து மின்சார யந்திர மூலம் சமையல் செய்து பன்றிகளுக்கு உணவாக்கிக் கமங்களுக்கு அனுப்புகின்றார்கள். கடந்த மகா யுத்தத்தில் இப்பட்டினம் பல குண்டுகளினால் தாக்குண்டு அதிக சேதம் அடைந்திருக்கின்றது. ஆகவே வீடில்லா நெருக்கடி இங்கே அதிகம் உண்டு. இதை நிவிர்த்தி செய்வதற்கு நகர சபையார் பல திட்டங்கள் செய்து அநேக மாடிகள் கட்டி எழுப்புகின்றார்கள். பெரும்பாலும் எட்டு ஒன்பது மாடிக் கட்டிடங்களே இப்போது கட்டப்படுகின்றன. ஆனால் பழைய லண்டனில் அதிகமாக நாலு அல்லது ஐந்து மாடிக் கட்டிடங்களே இருக்கின்றன.

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

## புலமை நிறைந்த முதுஞானி

அரவிந்தர் அமுதமுண்ணும் தமிழ் யோகி சுத்தாநந்த பாரதியாருக்கு வித்துவான் எஸ். உமைதாணுபிள்ளை அவர்கள் வழங்கும் வணக்க வாழ்த்து மலர்.

1. பூவின் மாலை வாடிவிடும்
   பொன்னின் மாலை தேயுமென
   நாவி னுரத்தால் நயமாக
   நாளும் நற்றமிழ் நங்கைக்குப்
   பாவி னாலே பாமாலை
   பாடிப் பரவும் பண்டிதனை
   ஆவ லடங்க நாவேநீ
   அகில மறியப் பாடுவையே.


2. ஆக்கம் நிறைந்த பலமொழியை
   அல்லும் பகலும் அயராமல்
   ஊக்க மாக உரித்தோடு
   உள்ளத் துரைக்கும் உணர்வாலே
   நீக்க மின்றித் தாய்மொழிக்காய்
   நித்த முழைக்கும் பேராளா
   காக்கப் பிறந்த கலைவள்ளால்
   கண்ணிய மாக வாழியவே.

3. பக்திச் சுவைசொட் டச்சொட்டப்
   பாடிக் குவிக்கும் பாவலனைத்
   தக்க புலமை நிறைந்தவனைத்
   தன்னே ரில்லாத் தமிழ்க்கடலை
   எக்கா லத்தும் இருந்தமிழை
   எழுந்து வளர வைத்தவனை
   ஒக்க உலகை நிதமாளும்
   உமையொரு பாகா! காத்தருள்வாய்.

4. முற்று முணர்ந்த அறிவாலே
   மூல நூலி னுயிர்நாடி
   சற்றுந் தரத்திற் குன்றாமல்
   தன்னை மறந்தே தமிழ்வெறியில்
   வெற்றி நாட்டி மொழிபெயர்ப்பை
   விதவித மாகத் தருபவனைப்
   பற்றும் வெறுப்பும் இல்லானைப்
   பத்ம நாபா! காத்தருள்வாய்.

5. புத்தம் புதிய அணிகண்டு
   புவன மறியத் தமிழ்த்தாய்க்குச்
   சித்தங் குளிர அணிவிக்கும்
   சீலஞ் சிறந்த தவயோகி
   சுத்தா னந்த பாரதியார்
   துறந்து வாழும் மெய்ஞ்ஞானி
   நித்த நித்தம் வாழ்ந்திடவே
   நிமல னடியை வேண்டுவனே.

—தொடரும்


இலக்கிய மஞ்சரி

4-ம் 5-ம், 6-ம் புத்தகங்கள்

பாடசாலைகளில் இலக்கிய பாடமாக, நான்காம், ஐந்தாம், ஆறும் வகுப்புகளுக்கு உபயோகிக்கக்கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளன.

விலை : 4-ம் புத்தகம் ... 50 சதம்
5-ம் ,, ... 60 ,,
6-ம் ,, ... 75 ,,

சுன்னாகம்: தனலக்ஷுமி புத்தகசாலை



# இதய ஊற்று

கசின்

## அத்தியாயம் 15

## பூலோக சுவர்க்கம்

"தண்ணீ ரூற்றெனும் தானே சுரக்கும்
புண்ணிய பூமியில் பொய்மைக ளின்றிக்
கண்ணியம் நிறைந்த காதலு முண்டுகொல்."

இலங்கையிலுள்ள செழிப்பான பிரதேசங்களிலே தண்ணீரூற்றும் ஒன்று. தன்பாட்டிலே அது ஊறிப் பாய்வதால் 'தண்ணீரூற்று' எனக் காரணப் பெயர் பெற்று விளங்கியது. பால், தேன், பழம் ஆகியன அவ்வூரின் செல்வம் ஆகும். பாலுந் தேனும் ஓடும் பூமி யென்று பலர் கூறுவார்கள். வாழை, கமுகு, பலா ஆகியாம் மரங்கள் எல்லாம் வானுற வோங்கி வளர்ந்து பயனுதவி, அழகுடன் விளங்கின. பல்வேறு செழிப்பும் பெற்று விளங்கிய தண்ணீரூற்றைச் சிலர் பூலோக சுவர்க்கம் என்றும் சொல்வார்கள்.

குப்பை மேட்டிலே முளைக்கும் செடி கொழு கொழுவென்று வளர்ந்தாலும், இலகுவிற் புழுவும் குத்திவிடும். தண்ணூரூற்றில் வசிக்கும் மனிதர்களும் குதூகலமாய் வாழ்ந்தபோதிலும், சிலர் நோய்க்கும் ஆளாய் விடுவார்கள். தண்ணீரூற்றிற் பெரிய அரசினர் மேகரோக வைத்தியசாலை ஒன்றிருந்தது. அவ்வைத்தியசாலை இலிகிதனாக மகாதேவன் மாற்றப்பட்டான்.

தண்ணீரூற்றில் ஓர் இடத்திலே நிலத்தினின்றும் தண்ணீரானது மேல்நோக்கி ஊறிப் பாய்கின்றது. அந்த இடத்தைச் சுற்றியுள்ளபாகம், கமுகு, வாழை முதலியவற்றால் நிறைந்து பெருஞ் சோலையாக விளங்கியது. அச் சோலைக்கு வெளியே போவார் உள்ளே இருப்பாரைப் பார்க்க முடியாது. சோலையின் உட்பக்கம் பட்டப் பகலிலும் இருட்டாய் இருக்கும். உச்சி மத்தியானத்திலும் குளுகுளு வென்று ஈரலிப்பாயிருக்கும்.

அச் சோலையின் நடுவேயுள்ள மரக்குற்றிமேல், மகாதேவன் உட்கார்ந்து ஆழ்ந்து யோசித்துக்கொண்டிருந்தான்.

நவக்கிரியிலே தோன்றும் பல சிறிய குன்றுகளையும், தூரத்தே தெரியும் பனஞ் சோலையையும் 'என்ன அழகான காட்சி' என்று அடிக்கடி சொல்லுகின்ற லலிதா, இச் சோலையையும், இதன் அயற் புறங்களையும் கண்டால் எவ்வளவு சந்தோஷப்படுவாள் என்று தனக்குள்ளே யோசித்துக்கொண்டிருந்தான். மகாதேவன் பூலோக சுவர்க்கம் என்று சொல்லப்படுகின்ற தண்ணீரூற்றுக்கு மாறி வந்த பொழுதிலும் அவன் மனம் அமைதியின்றியே இருந்தது. எந்த நேரமும் ஆழ்ந்த யோசனையில் இருந்தான்.

அவன் அன்று மாலை அச் சோலையில் மேற்கண்டவாறு சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது, சருகுச் சத்தம் ஒன்று அவனது சிந்தனையைக் கலைத்தது. அவன் திரும்பிப் பார்த்தபொழுது மரங்களுக்கிடையிற் பூரண சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்ததேயன்றி வேறொன்றும் காணப்படவில்லை. பூரண சந்திரன் உதயமாகி மேலே போவதற்குப் பதிலாகத் தன்னை நோக்கி வருவதை அவன் நேரே கண்டான்.

'திங்களும் ஈண்டுத் திரிதலு முண்டுகொல்' என்ற சிலப்பதிகாரம் அவன் படியாதவனானாலும், அவன் மனம் அப்படி எண்ணியது. திங்களன்று; பெண்ணே யென்று அவன் நிச்சயஞ் செய்துகொண்டு, முன் ஒரு பெண்ணுடன் தொடர்பு கொண்டு அச் சஞ்சலம் இன்னும் நீங்கினபாடில்லை; ஆகையால் இனி வேறு பெண்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வதில்லை என்று கண்டிப்பாகத் தீர்மானித்தான்.

ஆனால் அப்பெண் அவனருகில் வந்துநின்று 'நீங்களா?' என்று கேட்டாள். மகாதேவன் மனத்தில் இரண்டு கேள்விகள் ஒருமித்துக் கேட்க வேண்டும்போல் தோன்றியது. ஒன்று, 'நீ யாரை எதிர் பார்த்தாய்?' என்பது. மற்றது, 'என்னை உனக்குத் தெரியுமா?' என்பது. ஆனால் அவன் முதற் கேள்வியைக் கேட்டு அவளை வருத்த விரும்பவில்லை, எவருடைய மனத்தையும் வருத்த விரும்பாத சுபாவம் உள்ளவன் அவன். ஆனால் எதை எந்தநேரத்தில் சொல்லவேண்டுமோ, அதை அந்த நேரத்திற் சொல்லாமல் விடுவதுதான் மனிதன் விடும் பிழை. மகாதேவன் இரண்டாவது கேள்வியையே யோசித்து ஆறுதலாகக்கேட்டான்.

'ஓம்; நீங்கள் எங்கள் வீட்டுக்கு அருகிலேதானே வசிக் வசிக்கின்றீர்கள்.'

'உங்கள் வீட்டுக்கு அருகிலே, இங்கே வசிக்கிறேனா? யாழ்ப்பாணத்திலா?'

'என்னை உங்களுக்கு யாழ்ப்பாணத்தவள் என்றும் தெரிந்துவிட்டதா? இவ்வூர்ப் பட்டிக்காட்டுப் பெண்களைப் பார்த்தவுடனேயே தெரிந்துவிடுந்தான்.'

'எனக்கு இவ்வூர்ப் பெண்களுக்கும் யாழ்ப்பாணத்துப் பெண்களுக்கும் வித்தியாசம் தெரியாது.'

'உங்களுக்கு யாழ்ப்பாணத்தில் எந்த ஊர்?'

'அம்பிகாபுரம்.'

'ஓகோ! அப்படியானால் சரி; யானும் அம்பிகாபுரந்தான். உங்களை எங்கோ முன்னர் கண்டிருக்கிறேன்.'

'எங்கு கண்டிருப்பாய்?'

'அம்பிகாபுரம் டாக்குத்தர் சிற்றம்பலம் வீட்டுக்கு வந்திருப்பீர்களா? அவர் எனது சிற்றப்பா.'

'எனக்கு அவரைத் தெரியாது.'

'அம்பிகாபுரம் பாராளுமன்ற அங்கத்தவர் சித்திர வடிவேல் எனது ஒன்றுவிட்ட அண்ணர்.'

'அவரிடமும் நான் போனதில்லை.'

'அம்பிகாபுரம் பெரியகோட்டுச் சக்கிடுத்தார் என்னுடைய மாமனார்.'

'கோட்டடிப் பக்கம் நான் எனது சீவியத்திற் போனதேயில்லை.'

'அம்பிகாபுரத்தில் ஐந்து வருஷங்களுக்குமுன் ஸ்டேசன் மாஸ்டராய் இருந்தார், சந்தியாப்பிள்ளை; அவர் எனது அத்தானின் சிறிய தகப்பன்.'

'சந்தியாப்பிள்ளையை நான் சந்திக்கவே இல்லை.'

'அம்பிகாபுரத்தில் இப்பொழுது இரண்டாவது ஏசண்டாய் இருக்கிறார் தம்பாப்பிள்ளை. அவர் எனக்குப் பேரன் முறை.'

'நியாயமான பெரிய மனிதர் எல்லாம் உனக்கு இனமாக இருக்கிறதே; இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'

இந்த இடத்திலும் மகாதேவனுக்கு இன்னொரு கேள்வி கேட்கத் தோன்றியது. 'நீ இவ்வளவு பேரையுஞ் சொன்னாய்; உனது தாய் தந்தையரைப்பற்றிக் கூறவில்லையே?' என்று கேட்க நினைத்ததைக் கேளாமல் மேற் கண்டவாறு கேட்டான்.

'நான் இங்கே படிப்பித்துக் கொண்டிருக்கிறேன்.'

'அப்படியானால் நீங்கள் ஒரு உபாத்தியாயினி'

'ஆம்; உபாத்தியாயினி என்றால் கூடாதா!'

'அதற்காக அல்ல; நான் இவ்வளவும் உங்களை ஏக வசனத்தில் கூறிவிட்டேன்'

'அதுதான் நல்லது; நீங்கள் இனியும் அப்படிக் கூறுங்கள்; அதுதான் எனக்கு விருப்பம்.'

'நீங்கள் விரும்புவதை நான் செய்ய வேண்டும்போலிருக்கிறது.'

'நீங்கள் ஏக வசனத்திற் கூறினால், நான் வருந்துவேன் என்று நினைத்ததிலிருந்து நான் வருந்துவதைச் செய்யாமல் விடவும், விரும்புவதைச் செய்யவும் விரும்புகிறீர்கள் என்பது தெரிகிறதல்லவா?'

'பெண்களுடன் சம்பாஷித்து வெல்ல முடியாது; அதுவும் உபாத்தியாயினி என்றால் சொல்ல வேண்டுமா? இதற்கு அவள் பதில் சொல்வதற்குப் பதிலாகக் கலகலவென்று சிரித்தாள். அவள் சிரிப்பினால் அந்தப் பிரதேசம் முழுவதும் கலகலத்தது.

கொடிச்சுவாலன் மாட்டின் வால்போல, நன்கு திரித்து நுனியில் குஞ்சமும் கட்டிவிட்ட கூந்தற் பின்னலைச் சிலசமயம் முன்னுக்கு எடுத்துத் தடவிக்கொண்டும், சில சமயம் பின்னுக்கு எடுத்து எறிந்துவிட்டும் அவள் கதைத்தாள்.

சிலசமயம் கூறுகுறிப்பாக மகாதேவனைப்பார்ப்பாள். சில சமயம் மிகவும் நாணப்பட்டவள்போல் நிலத்தைக் குனிந்துபார்த்துக்கொண்டு காலால் கீறிக்கொண்டு நிற்பாள்; கண்களால் கூர்மையாகப் பார்ப்பாள்; கண்களை வெட்டி வெட்டிப் பார்ப்பாள்; புன்சிரிப்புக் கொள்வாள்; கோபமாக வெறிச்சுப் பார்ப்பாள். இப்படிப் பல நூறு நிலைகளில் அச் சில நிமிஷங்களுக்கிடையில் அவள் காட்சியளித்தாள். மொத்தத்தில் அவளைக் கண்ட நேரந்தொடங்கி அவள் போகும்வரையும் ஒரு இனந்தெரியாத மயக்கத்தை மகாதேவனுக்குக் கொடுத்தாள். சினிமாவிலே 'றீல்' தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும்பொழுது மனிதன் தன் நினைவை மறந்து அந் நினைவேயாகி விடுகிறான். அதுபோல அவளும் மாறி மாறி விதம் விதமான காட்சி காட்டிக்கொண்டு நின்றாள்.

ஒரு மனிதன் உலகில் எதற்குப் பயப்படுகிறானோ, அது அவனைத் தொடர்ந்துகொண்டே வரும். மகாதேவனும் இளமை தொட்டுப் பெண்களுக்குக் காரணமின்றிப் பயப்பட்டு வந்தான். அவன் எவ்வளவு தூரம் விலகி நடந்து வந்தபொழுதிலும் பெண்கள் அவன் வாழ்க்கையிற் குறுக்கிட்டு விடுகிறார்கள். பெண்கள் இல்லாத உலகம் இல்லையே; இதற்கென்ன செய்யலாம்? என்று அவன் யோசித்தான். — தொடரும்

## முன் கதைச் சுருக்கம்

மகாதேவன், அம்பிகாபுரம் அனுதசாலையிற்படித்து, யாழ்ப்பாணம் கச்சேரியில் இலிகிதராகக் கடமையாற்றுகிறான். அவன் விடுதிக்கருகில் லலிதாம்பிகையை அடிக்கடி சந்திக்கிறான். மகாதேவன் தனது குருவின் போதனைப்படி பெண்ணினம் தீங்கானது என்னும் எண்ணம் உள்ளவன். லலிதாம்பிகையுடன் மேலும் தொடர்பு ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தில் தனது விடுதியை மகாதேவன் மாற்றிக்கொள்ளுகிறான்.

மகாதேவன் பொதுவுடைமைக் கட்சியிற் சேர்ந்திருக்கிறானென ஐயுற்ற அரசாங்கம் அவனைக் கிராமப் பகுதிக்கு மாற்றி விடுகிறது. லலிதாம்பிகை தனது மாமனார் கேணல் சுந்தரம்பிள்ளை வேறு இடத்திற்குச் செல்லவே, உபாத்தியாயினியாக வயாவிளான் பாடசாலையிற் சேர்ந்து, புத்தூரில் வசிக்கும் தனது சிநேகிதியுடன் வசித்து வருகிறாள்.

மகாதேவனும் லலிதாவும் மீண்டும் நிலாவரைக் கருகில் தினமுஞ் சந்தித்து வருகின்றனர். இருவருக்குமிடையில் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் லலிதா நிலாவரைக்குள் குதிக்கிறாள். மகாதேவனும் குதிக்கிறான். மகாதேவனுக்கு நீந்தத் தெரியாமையால், லலிதா அவனையும் காப்பாற்றுகிறாள்.

லலிதாவின் விடுதியில் மகாதேவன் தங்குகிறான். அன்று இரவு அவனது சைக்கிள் காணமற்போகிறது.

அடுத்தநாளிரவு, லலிதாவின் சிநேகிதி திரிபுரசுந்தரியின் நகைகளையும், அவர்களின் சமையற்காரியையும் காணவில்லை. பொலிஸ் இன்ஸ்பெக்ரர் தாமோதரத்தால் இக்களவுகள் ஒன்றுங் கண்டுபிடிக்க முடியவில்லை. லலிதாவின் வீட்டுக்கருகில் உள்ள ஒரு தாழம் பற்றைக்குள் வேறொரு சைக்கிளை இன்ஸ்பெக்ரர் தாமோதரம் எடுத்தார்.

இன்ஸ்பெக்ரர் தாமோதரம் லலிதாவின் வீட்டுக்கு அடிக்கடி வந்து போகிறார். மகாதேவனுக்கு இது பிடிக்கவில்லை. லலிதா மகாதேவனை விரைவில் மணந்து கொள்ளத் திட்டமிடுகிறாள். தனது மாமனுக்கு அவனை விவாகஞ் செய்துகொள்ள உத்தரவு தருமாறு எழுதிக் கேட்கிறாள்.

லலிதாவின் மாமனார் அவனை விவாகஞ் செய்யப்படாதென்று கண்டிப்பாக எழுதுகிறார். லலிதாவுக்கு இது பெரிதும் ஆச்சரியத்தை விளைவிக்கிறது. மேலே என்ன செய்வதென்று அவளுக்கே புரியவில்லை. மகாதேவனும் முகத்தைக் கடுவன் பூனை மாதிரி வைத்துக் கொண்டு திரிகிறான் ..................

அன்புக்கு அறிகுறி

அன்பர்களுடன்
தொடர்பு வைத்திருப்பதற்கு
சிறந்த வழி

ஈழகேசரி

★

ஒரு வருடச் சந்தாப்பணத்தையும் இவ்விண்ணப்பப்பத்திரத்தையும் நிரப்பி அனுப்பிவிட்டால் ஈழகேசரி பிரதிவாரமும் உங்கள் உற்றார், உறவினர் அன்பர்களைச் சேர்ந்தடையும்.

சந்தா அதிபர்
ஈழகேசரி
சுன்னாகம்

ஐயா,

பின்வரும் பெயருக்குத் தங்கள் ஈழகேசரியை அனுப்பிவைக்கவும். இத்துடன் ஒரு வருடச் சந்தா ரூ.6/- வெள்ளி 6/- முற்பணமாக அனுப்பியுள்ளேன்.

....................................
ஒப்பம்

பெயரும் விலாசமும்:
....................................
....................................
....................................
....................................

# கால்கடுக்க நிற்குங் காட்சி

## கிராமாபிவிருத்திப் பிரசாரம்

## சுயநலமற்ற தலைவர்கள் இல்லாப் பெருங் குறை

கொழும்பு 30-3-51

தினமும் காலையில் கொழும்பு நகர்ப் புறங்களிலிருந்து தொழில், உத்தியோகம் காரணமாக அநேகர் கொழும்புக்கோட்டைக்கு வந்து சேருகின்றனர். புகையிரத வண்டிகளில் நிற்க இடமின்றிப் பிரயாணிகள் செல்கின்றனர். தெருவீதிகளிலுள்ள பஸ் நிற்கும் ஸ்தானங்களில் அநேகர் 'க்யூ' வரிசையில் நிற்பதைக் காணலாம். சில சமயம் ஒரு பிரயாணி அரை மணித்தியாலத்துக்குமேல் காத்து நிற்கவேண்டியிருக்கிறது.

குறிக்கப்பட்ட வீதிகளில் பஸ் போக்குவரவை நடத்த சில கம்பனிகளுக்கு தனிப்பட்ட அனுமதி கொடுக்கப்படுகிறது. இதனால் ஒரு வீதியில் பஸ் போக்குவரத்தை நடத்தும் பூரண சுதந்திரம் ஒரு கம்பனிக்குக் கிடைத்து விடுகிறது. இதன் பயனாக சில கம்பனிகள் தாங்கள் விரும்பிய விதமே பஸ்வண்டிகளை ஒழுங்குசெய்து பிரயாணிகளை ஏற்றிப் பறிக்கின்றனர். பிரயாணிகளும் வேறு வசதியின்றிப் பஸ்வண்டிகள் வரும்வரை காத்து நிற்க வேண்டியிருக்கிறது. காலிப் பெரும் வீதியில் இவ்விதம் பிரயாணிகள் காத்து நிற்பதற்கு ஒரு காரணம் அந்த வீதியில் வாகனப்போக்குவரத்து செப்பமாக ஒழுங்கு செய்யப்படாமையே என்று 'சவுத் வெஸ்ரேண் பஸ் கம்பனி'ப் பிரதம அதிகாரி செனேற்றர் திரு. சிரில் டி சொயிசா கூறுகிறார்.

### கிராம வாரம்


ஏப்ரில் மாதம் 6-ம் திகதி தொடக்கம் 12-ந் திகதிவரையுள்ள வாரத்தை இலங்கை முழுவதிலும் கிராமாபிவிருத்திப் பிரசாரவாரமாகக் கொண்டாட கிராம அபிவிருத்திப் பகுதி ஏற்பாடு செய்திருக்கிறது. பல பகுதிகளும் இதனை வெற்றிகரமாக நடத்த ஒத்துழைக்கும். கூட்டுறவுப் பகுதி, விவசாயப் பகுதி, குடிசைக்கைத்தொழிற்பகுதி, தேசிய சேமிப்புப் பகுதி, வைத்தியப்பகுதி முதலியன விசேஷ பங்கெடுத்துக்கொள்ளும். சோளத்தைச் சிறந்த உணவுப் பொருளாகக் கொள்ள விவசாயப்பகுதி அநேக உணவு வகைகளைச் செய்து காட்டும். கூட்டுறவு விவசாய உற்பத்திப் பொருள் விற்பனவுச் சங்கங்கள் பற்றி கூட்டுறவுப் பகுதி பிரசாரம் செய்யும். அந்நிய நாட்டுப் பொருட்களுக்குப் பதிலாக உள்நாட்டுப் பொருட்களையும் சுதேசிப் புடவைகளையும் உபயோகிக்குமாறு பிரசாரம் செய்யப்படும். இது உண்மையில் அவசியம் வேண்டியதே. முதலில் எங்கள் பிரதமரும் மந்திரிமாரும் சில விசேஷ வைபவங்களின் போதாவது உள்நாட்டுப் புடவைகளை அணிந்து காட்டினார்களானால் மக்களும் கைக்கொள்ளுவார்கள். இவ்வாறே இந்தியப் பிரதமர் செய்து வருகின்றார். நம் நாடும் இம்முறையைப் பின்பற்றலாகாதா? கிராமாபிவிருத்திப் பற்றிக் கமக்காரர் எழுதும் கட்டுரைகளுக்கு ரேடியோ அதிகாரிகள் பரிசுகள் வழங்கத் தீர்மானித்திருக்கின்றனர்.



இலங்கையின் பிரதமப் பிரதிநிதியாக லண்டனிற் பதவி வகிக்கும் ஸ்ரீ ஈ. ஏ. பி. விஜயரத்தின அவர்களுக்குச் சுவாத்தியம் பிடிக்கவில்லையெனத் தெரிகின்றது.

### ஈழகேசரிக் கடிதம்

சிங்களமும் தமிழும் என்ற தலையங்கத்துடன் திரு. வி. விசுவலிங்கம் அவர்கள் ஈழகேசரி 25-3-51 இதழில் எழுதிய கடிதத்தைக் கொழும்பிலுள்ள தமிழர் மிகவும் பாராட்டிப் பேசுகின்றனர். சிங்களர் தமிழ் படிப்பதென்பது ஒருபோதும் நடைபெறப்போகிற விஷயமல்ல. முதுகு சொறிந்து முன்னேறப் பார்க்கும் அரசியல்வாதிகள் தமிழரையாவது தமிழையாவது சீர்ப்படுத்தி வழிகாட்டிவிடமுடியாது. தங்கள் முன்னேற்றக் குறுக்கு வழி இதுவெனச் சிலர் கருதி அவ்வாறே மேடைப் பிரசங்கங்களும் செய்கின்றனர். தமிழர்களுக்கு இப்பொழுது அநுபவம் வாய்ந்த சுயநலமற்ற தியாகத் தலைவர்கள் இல்லாதிருப்பது பெருங் குறையாகவே இருந்துவருகிறது. சிங்களத்தையும் தமிழையும் அரசாங்கமொழியாக்குவதில் இதுவரை என்ன நடைபெற்றுவிட்டது. கொழும்பிலே சில விளம்பரங்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும்தான் உண்டு. இதைப்பற்றி எழுதுவதானால் இன்னும் அதிகம் எழுதலாம்.




### நல்லெண்ணத் தூதுக்கோஷ்டி

இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இலங்கையைப் பற்றி நிலவி வரும் தப்பான அபிப்பிராயங்களை நீக்க இலங்கை நல்லெண்ணத் தூதுக்கோஷ்டியொன்றை அனுப்புவது சம்பந்தமாக இப்பொழுது ஆலோசனை செய்யப்படுகிறது. மேலும் தென்னிந்தியாவில் நடைபெறும் பிரசாரத்தின் உண்மைகளை எடுத்துக்காட்ட அங்கே ஒரு சமாச்சாரப் பகுதியை நிறுவுவது நல்லதென்பது சிலகாலத்துக்கு முன் ஆலோசிக்கப்பட்டதும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இவ்வித தூதுக்கோஷ்டிகளை அனுப்புவதால் பாகிஸ்தான் இந்தியாமக்கள் இலங்கையிடம் பரஸ்பர நேச மனப்பான்மை உடையனவாகவிருக்கும் என்பதற் சையமில்லை. இந்தியர்களின் பிரசாவுரிமை பற்றியோ நல்ல விளக்கம் கூறப்படவில்லையென்பது இந்தியர்களின் கவலையாக இருக்கிறது.

### அரிசித் தூது

இலங்கைக்கு அரிசி பெறுவதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பர்மாவுக்குச் சென்றிருந்த உணவு மந்திரி திரு. ஏ. இரத்தினாயக்காவும் சேர் ஒலிவர் குணதிலக்காவும் இலங்கை வந்து சேர்ந்தனர். இவ்விஷயம்பற்றி பர்மா அரசாங்கம் செய்த முடிவுகளைக் கொண்ட செய்தியைப் பர்மாப் பிரதமர் இலங்கைப் பிரதமருக்கு அனுப்பியுள்ளார். இப் பேச்சுவார்த்தைகள் மிகவும் திருப்தி பளித்தனவென்று சேர் ஒலிவர் விமானநிலையத்திற் குறிப்பிட்டார். பர்மாப் பிரதமர் இலங்கைமீது அநுதாபமுடையவராக இருக்கின்றாரெனவும் விளக்கிக் காட்டினார்.

### திரு. எம். ஸ்ரீகந்தா

காணி அபிவிருத்திப் பகுதியின் உதவி அதிபராகவிருந்த திரு. எம். ஸ்ரீகந்தா சி. சி. எஸ். அவர்கள் அப்பகுதியின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். காணி அபிவிருத்திப்பகுதி ஒரு தனிப் பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது.

### ஓய்வு பெறுகிறார்

தொழில் சமூகசேவை மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஏ. ஈ. கிரிஸ்ரோவல்ஸ் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறத் தமது பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ளார். மேமாதம் தொடக்கம் இவர் ஒய்வை முன்னிட்டு லீவிற் செல்கின்றார். இளைப்பாறுவதற்கு முன் லீவிற் செல்லும் வழக்கப்படி இவரும் செல்கின்றார். இவர் 36 வருட அரசாங்கசேவை செய்துள்ளார்.

### பேராசிரியர் காலமானார்

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கீழைத்தேச மொழிகள் பகுதித் தலைவரான டொக்டர் எம். டி. இரத்தினசூரியா அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை (30-3-51) தமது இல்லத்திற் திடீரெனக் காலமானார்.

---

✽ தமிழாசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவமானத்தைப் போக்க யாருமில்லை.

# தமிழ் ஆசிரியர்கள் உரிமை

## பறிபோகாது பாதுகாத்தல் வேண்டும்

மட்டக்களப்பு 29-3-51

இலங்கையினின்றும் இன்று வகுப்பு வாதத்தை ஒழித்துவிட அரசாங்கம் முயன்று வருவதாகக் கூறிக்கொள்ளுகின்றனர். ஆனால் அதே அரசாங்கம் அரசினர் தமிழ்ப் பாடசாலைகள் விஷயத்தில் வகுப்பு வாதத்திற்குத் தூபமிட்டு வருகின்றது. தற்போது முஸ்லீம்கள் அதிகமாக உள்ள அரசினர் பாடசாலைகளில் முஸ்லீம்களைத் தலைமை யாசிரியராக்க வேண்டும் என்ற கொள்கையைக் கையாண்டு ஒருசில முஸ்லீம் ஆசிரியர்களைத் தலைமையாசிரியராக நியமித்து வருகின்றது. அவர்களுக்கு இடமளிப்பதற்காகப் பல தமிழாசிரியர் நாடு கடத்தப்படுகிறார்கள்.

முஸ்லீம்களில் இரண்டாம் தாரதரப் பத்திரம் பெற்றோர் தலைமையாசிரியர்களாக விருக்க, முதலாவது தாரதரப் பத்திரம் பெற்ற பல தமிழாசிரியர்கள் அவர்களின் கீழ்க் கடமை பார்க்கின்றனர். சமீபத்தில் மதுவரிப்பகுதியில் அனுபவங் குறைந்த இரு பரிசோதகர்களுக்குப் பதவி கிடைத்த செய்தியைப் பத்திரிகைகள் கொட்டை எழுத்திற் பிரசுரித்து ஆசிரிய வாசகங்களும் எழுதியுள்ளன.

தமிழாசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவமானத்தைப் போக்க யாருமில்லை. இதனால் அரசாங்கத்திற் சேவை செய்யும் தமிழாசிரியர்கள் கூடி ஆசிரியத் தமிழர் சங்கம் என ஒன்றை அமைத்து முக்கியமான இடங்களில் கிளைச் சங்கங்களை நிறுவி வருகின்றார்கள். இச் சங்கத்தின் கிளை மட்டக்களப்பிலும் அமைக்கப்பட்டுளது. இச் சங்கம் தொழிற் சங்க முறைப்படி பதிவு செய்யப்பட்டிருப்பதாக விருப்பதால் தமிழாசிரிய சகோதரர்கள் அனைவரும் இச் சங்கத்தில் சேர்ந்து தங்கள் உரிமைப் போரை நடத்துவது அவசியமாகும்.


கிழக்குத் தபால்

நமது நிருபர்


### அடிகளாரின் பிறப்பிடம்

சுவாமி சுத்தாநந்த பாரதியாரின் நாவலர் பெருமான் என்ற நூலில் 14-வது பக்கத்திலே பேராசிரியர் விபுலாநந்த அடிகளாரை யாழ்ப்பாணத்தவராக்கியிருப்பது இங்குள்ள பல தமிழ் அறிஞர்களுக்கு வருத்தத்தையளித்துள்ளது. தமிழ் விழா பற்றிய முதற் கூட்டம் நடந்தபோது கூடச் சில பண்டிதர்களால் இது எடுத்துக் காட்டப்பட்டது. இப்படியே திருகோணமலை கனகசுந்தரம்பிள்ளை அவர்களைக்கூட யாழ்ப்பாணத்தவராகக் காட்டப்பட்டுள்ளது. சுவாமி சுத்தாநந்தர் அவர்கள் 15-வது பக்கத்தில் மட்டக்களப்பு என்ற பதத்தை எடுத்தாண்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)


கொழும்பில்

ஈழகேசரி

✽

கிடைக்குமிடம்:

பேசிக் புக்ஸ்ரோல்,
99 சதாம் வீதி,
கோட்டை :: கொழும்பு



**A book that supplies a long felt need!**

# First Steps to ENGLISH

★

by **GRACE THURAISINGHAM**

**Price: 50 cts. ● ● Postage 15 cts.**

PUBLISHERS:

**North-Ceylon Tamil Works Publishing House**
**CHUNNAKAM**

நீண்டகால தேவையை நிவர்த்திசெய்யும் நூல்!

# ஆங்கிலம் பயில்வதற்கு முதற்படி

★

ஆசிரியை: கிறேஸ் துரைசிங்கம்

விலை சதம் 50. தபாற்செலவு சதம் 15.

பிரசுரிப்போர்:

வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்
சுன்னாகம்

1930

# ஈழகேசரி

சுன்னாகம், விகிர்தி பங்குனி ௧௸
— காந்தி ஆண்டு 82 —
பேசுந் தந்தி இல. 805

## அதிபரின் பிரிவு

நமது பத்திரிகையின் அதிபராகவும் நிர்வாக ஆசிரியராகவுமிருந்து சென்ற இருபத்தொரு வருடமாக அரும்பணியாற்றிய திருவாளர் நா. பொன்னையா அவர்கள் சென்ற வியாழக்கிழமை இரவு இறைவன் திருவடி எய்தினர். இவர் செய்துவந்த தொண்டுகள் பலதிறப்பட்டன. சிறந்த தேசிய நோக்குடன் காந்தீய வழி நின்று அரசியற்றுறையில் ஊக்கத்துடன் பணியாற்றிவந்தனர். இப்பத்திரிகையை ஆதாரமாகக்கொண்டு சுதந்திரத்தின் அவசியத்தை இடைவிடாது எடுத்துக்காட்டி வந்தனர். பொதுமக்கள் தமது உரிமைகள் யாவை, பொறுப்புக்கள் யாவை, கடமைகள் யாவையென்பதை உணரும்படி செய்த பெருமையும் இவர்க்கேயுண்டு. மிக்க துணிவுடன் எவ்வித அச்சமுமின்றி உண்மைகளையும் குறைகளையும் எடுத்துக்காட்டித் தேச நலத்துக்காக இவர் பணியாற்றினர். யாழ்ப்பாணத்திலுள்ள பொதுநல ஸ்தாபனங்களிலெல்லாம் நெருங்கி ஈடுபட்டு ஆர்வத்துடன் உழைத்துவந்தனர்.

அரசியற்றுறையில் மாத்திரமன்று தமிழ்மொழியின் விருத்தியை நோக்கியும் இவர் ஆற்றிய பணிகள் இம்மட்டன்று. வித்தியாசாலை மாணவர்க்கும் மற்றையோர்க்கும் உபயோகமாகக்கூடிய அநேக நூல்களை அச்சிட்டுவெளியிட்டனர். தமிழறிவும் ஆர்வமும் தமிழ் மக்களிடையே பெரிதும்வேரூன்றுவதற்கு இவரது நூல்களும் பத்திரிகையும் பணியாற்றி வருகின்றன.

அரசியல் விஷயங்களில் மாத்திரமன்று, சமுதாயச் சீர்திருத்தத்திலுங் கண்ணுங் கருத்துமாக உழைத்து வந்தனர். காந்தியத்தை முற்றுகப் போற்றிக் கடைப் பிடித்தனர். மிக்க துணிவுடன் சிறிதும் அச்சமின்றித் தாம் ஏற்றுக்கொண்ட கொள்கைகளை அனுட்டானத்திற் கைக்கொண்டு செல்லும் இயல்பும் இவர்க்கு உண்டு.

தேசநலத்தையும்பொது நன்மையையும் நாடித் தாம் அரிது தேடிய பொருளைக் கை கூசாது பரோபகாரமாக வழங்கிவந்தனர். எத்தனையோ கல்வி ஸ்தாபனங்கள், எத்தனையோ அரசியல் ஸ்தாபனங்கள் பொது நிலையங்கள் என்பன இவரது தாராளமான கொடையால் விருத்தியடைந்துவர்னை. இவர் போன்ற தேசிய வாதியை, தமிழ் நண்பரை, ஆசார சீர்திருத்தக்காரரை, கொடைவள்ளலைக் காண்பதரிது. இவருடைய பூதவுடம்பு அழிந்ததாயினும் புகழுடம்பு அழியப்போவதில்லை. இன்னோரன்னபெருமையும் புகழும் வாய்ந்த தமிழ்ப் பெரியாரை நாடு இழந்துவிட்டது. இவரது ஆன்மா இறைவன் தண்ணிழலடைந்து சாந்தியடைவதாக.

### முட்டுக்கட்டை

தேசியமொழிகளை விருத்தி செய்ய வேண்டும். அவற்றை அரசாங்க மொழிகளாக்க வேண்டுமென்ற அக்கறையுடையார் பலருளர். இன்னொரு சாரார் நாட்டிலிருந்து கவலைப்படுபவர்கள். ஆங்கில மொழிக்கு இதுவரையுமிருந்த கௌரவமும் மதிப்பும் குன்றி வருகின்றதே, மேலைத்தேச நாகரிகங்கள் பழக்க வழக்கங்கள் அருகிவருகின்றனவேயென்று இவர்கள் அடையும் துயரம் இம்மட்டன்று. இவர்கள் நாட்டின் நற்பேற்றிற்கு முட்டுக்கட்டைகளாக நிற்பவர்கள். ஏதோ ஆங்கிலமொழி சடுதியில் நின்றுவிடப்போகின்றது. மதுபானம் ஒழியப்போகின்றதெனப் புலம்பிக் கவலைப்படுகின்றனர். மேலைத்தேசப் போலி நடிப்புக்களை மேற்கொண்ட இவர்கள் துயரடையாது இருப்பது நூதனமன்று. தம் நாட்டின் உண்மையான முன்னேற்றத்துக்கு உண்மையான உயிர்நாடியாக உள்ளன யாவையென இவர்கள் இதுவரையும் உணர்ந்தறியாதது பெருந்துக்கமே. இவர்கட்கு அனுசரணையாகச் சில ஆங்கிலத் தினசரிப் பத்திரிகைகளும் இடைவிடாது பிரசாரம் செய்து தம்முள் மகிழ்கின்றன. அவசரப்படாதே! அவசரப்படாதே!! என்பதுதான் இப் பத்திரிகைகளின் இடைவிடாத எச்சரிக்கை. ஆங்கிலமொழி இன்னும் பல்லாண்டுகட்கு இருந்துவரும் என்பதை எவரும் மறுக்கவியலாது. ஆனால் தேசிய மொழிகளை விரைந்து அரசாங்க மொழியாகச் செய்வதில் ஏன் ஊக்கம் காட்டப்படாது? இப்போது பிரதமர் சேனநாயக்காவும் இப் போலிக் கூச்சலைக் கேட்டு அவசரப்பட வேண்டியதில்லை என்கின்றார். ஆனால் இந்தப் போலி வேஷக்காரரும் பத்திரிகைக்காரரும் ஒன்றினை உணர வேண்டும். தேசிய மொழியே நாட்டின் உண்மை விருத்திக்கு உறுதுணையாவது; ஆங்கிலமொழிக்கு இனி மதிப்பு இருக்கப்போவதில்லை. இனியாவது பொய்க் கூச்சல்களை ஒழித்துத் தேசத்தின் ஆக்கத்தில் இவர்கள் நாட்டஞ் செலுத்துவாரா?

### தீராத இழுக்கு

யாழ்ப்பாண நகரபரிபாலன சபையின் நடபடிக்கைகள் சீரிய முறையில் நடைபெறுது சென்ற நான்கு மாதங்களாக இழுபடுகின்றன. இந் நகர சபையில் அங்கத்துவம் வகிப்போர் இருகட்சியாகப் பிரிந்து தமது வல்லமையைக் காட்டி வருகின்றனர். அதனால் நகர மக்கள் அளவில்லாத் துயரையடைந்துவருகின்றனர். இந்த அங்கத்தினர் தம்முட் போட்டியிட்டு வல்லடி வழக்குப்பேச இடையிலுள்ள பொதுமக்கள் அளவில்லாத துயரையடைவதுதான் மிகப் பரிதாபமானது. பிரதம மந்திரியாரும் சுகாதாரப்பகுதி மந்திரியாரும் சேர்ந்து முயன்று இவர்கட்கிடையில் எழுந்த பிணக்கினை ஒருகால் தீர்த்து வைத்தனர். ஆனுல் அது பின்னர் மறுபடியும் தோன்றிவிட்டது. நகர பரிபாலனத்தைப் பின்போட இயலுமா? எத்தனை நாட்களுக்கு இந்தச் சீர்கேடு நிலைத்து நிற்பது? இந் நகரசபை பன்முறைகூடிக் கூடிப் போதிய அங்கத்தவர் சமுகமளியாதமையாற் குலைகின்றதாமே. அப்படியாயின் இதற்கு எவ்வித பரிகாரமுஞ் செய்யாதிருப்பதா? ஸ்தல ஸ்தாபனப் பகுதியினர் இந்த ஊழலை நிவிர்த்திசெய்ய முன்வரவேண்டாமா? அங்கத்தவர் யாவரையும் கூட்டங்கட்குச் சமுகமளிக்க வழிவகைகளைக் காணவேண்டும். அன்றேல் இச் சங்கத்தைக் குலைத்துப் புதிய சங்கத்தை அமைக்க வேண்டும். அப்படி விரைந்து செய்யாவிடின் யாழ்ப்பாண நகர பரிபாலனம் மிக்க கேவல நிலையை அடையுமன்றோ. நகரப் பொதுமக்கள் விழித்தெழுந்து தமது பிரதிநிதிகளை ஒறுத்து வழிப்படுத்துவதும் அவசியம். பொதுமக்களின் பிரதிநிதிகளாவோர் பொது நன்மைக்கு ஊறு விளைப்பது முறையாகாது.

### மது நீக்கம்

இலங்கையில் மது நீக்கம் விரைவில் ஏற்பட வேண்டுமென்று ஒரு கட்சியினர் சென்றசில ஆண்டுகளாக முயன்று தொண்டாற்றிவருகின்றனர். இவர்களது கூச்சல் நிர்மானுஷ்யமான நடுக்காட்டில் எழும் பேரொலி போலாகின்றது. அரசினராவது பத்திரிகைகளாவது இவ் விஷயத்தில் விசேஷ அக்கறை கொள்வதாகக் காணேம். அரசாங்கத்தினர் தமது வருமானத்தைப் பெரிதாக மதிக்கின்றனர். எவ்வளவு காலத்துக்கு இம் மது நீக்கத்தைப் பின்போட இயலுமோ அவ்வளவுக்கு மிக முக்கியமான இவ் விஷயத்தைக் காலதாமதஞ் செய்கின்றனர். அரசினர் ஒரு புறமாக, மேலைத்தேச முறைகளைப் பெரிதும் ஓம்பி அதில் முற்றாக மூழ்கி இனிது களிக்குஞ் சில பத்திரிகைகளும் வெறும் வேஷதாரிகளும் மது நீக்கம் என்றவுடன் பதை பதைத்து உளறித்தள்ள ஆரம்பித்து விடுகின்றனர். மது அருந்துவதை முற்றாக நீக்கவியலாது; அது ஆரோக்கியத்துக்கு அவசியம்; அதை அருந்தாவிடில் அநேகர் இறந்தொழிவர்; எனவே, சிறிது சிறிதாகத்தான் அதைக் குறைக்க வேண்டுமென்கின்றனர். அமெரிக்காவில் மது நீக்கம் சித்தியடையவில்லை இந்தியாவில். இதனுற் பெருநட்டம் ஏற்பட்டதென்று எடுத்துக் காட்டுங்கள் தேடுவதில் இவர்கட்கு இணையானோர் எவருமில்லை. ஆனுல் மதுவினுல் ஏற்படும அளவில்லாத் தீமைகளை இவர்கள் மறுக்கமாட்டார். சன்மார்க்கத்துக்கு விரோதமான இவ் விஷயம் ஒழிக்கப்பட வேண்டுமென்பதை எவரும் முழுமனத்துடன் ஆதரிக்க வேண்டியதே. முற்றாக இதனை நீக்க முடியாதாயினும் படிப்படியாகவேனும் இத்தீமை அகலவேண்டியதுதான். தடைதாமதங்கள், பண நட்டங்கள், முட்டுக்கட்டைகள் என்பன எதிர்த்து நின்றவிடத்தும் இந்திய அரசினர் தளர்ச்சியடையாது மதுநீக்கத்தை நாடி ஆர்வத்துடன் தொண்டாற்றுகின்றனர். விஷயமிவ்வாருக இலங்கையரசினர் மக்களின் சன்மார்க்கத்தைப் பொறுத்த விஷயத்தில் ஏன் பாராமுகமாக் கொள்ள வேண்டுமோ தெரியவில்லை. நமது அரசினர் இவ்விஷயத்தில் உண்மையான அக்கறை எடுத்தல் அவசியமாகும்.

## ஏதேது ஊரத்தில்

### பாட்டைசாரி

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு மந்திரி சபையினர் வழிவகைகள் தேடிக் கொண்டிருக்கின்றனர். அரிசிப் பங்கீட்டை அதிகமாக்கினுல் வாழ்க்கைச் செலவு குறையுமென அரசினர் கருதுகின்றனர்.

இப்போது பிரதி வாரமும் தலைக்கு ஒன்றேகாற்படி அரிசி கிடைக்கின்றது. தொழிலாளர்களுக்கு இது எந்த மூலைக்கு? இந்த அழகில், இவர்கள் தங்களுக்கு மேலதிகமான உணவுப் பொருள்களைக் கள்ளச் சந்தையிற் பெறுகின்றனர். அரசினர் அரிசிப் பங்கீட்டைக் கூடுதலாக வழங்கினுற் கொள்ளை இலாபம் அடிப்பவர்களுக்கு வயிற்றிலடித்தது போலவேயிருக்கும்.

❁

### மற்றோர் மந்திரி

இப்போது இருக்கின்ற மந்திரிமாரின் தொகை போதாதெனக் கருதிப்போலும் மது நீக்கத்தில் அக்கறையுள்ளவர்கள் அதற்கெனவும் ஒரு மந்திரியை நியமிக்கும்படி யோசனை கூறியிருக்கின்றார்கள். சென்னையில் இப்படி ஒரு மந்திரி கடமையாற்றி வருகின்ருர். மதுபான வரி சம்பந்தமாக அரசினர் கையாளும் முறைகள் இங்கு மது நீக்கத்தில் ஈடுபட்டு உழைப்பவர்களுக்கு அடியோடு பிடிக்கவில்லை.

ஆனுல் அரசினரோ சாராய விற்பனையால் எத்தனையோ ஆயிரம்ரூபாய் கிடைக்கின்றதென மகிழ்ச்சியடைகின்றனர்.

மதுபானம் ஒழியவேண்டுமெனப் பிரசாரஞ்செய்பவர்கள் ஒரு புதிய யோசனையை அரசினருக்குச் சமர்ப்பிக்கப் போகின்றனர். அரசாங்க உத்தியோகங்களை இனிமேல் மதுபானம் அருந்தாதவர்களுக்கு மாத்திரம் வழங்க வேண்டுமென்பதே அந்த அபூர்வயோசனையாகும்!

❁

### ஒலிவரின் யுக்தி

சேர் ஒலிவருக்கு இங்கிலாந்தைவிட்டு இலங்கைக்குச் செல்லவேண்டுமென்ற ஆசை ஏற்பட்ட காரணத்தினுலேயே, இங்கு வந்து உள்நாட்டு மந்திரிப் பதவியை வகிக்கின்ருர் என அறியக்கிடக்கின்றது.

இலங்கை திரும்புவதற்கு சேர் ஒலிவர் ஒரு யுக்தியைக் கையாண்டார் என அறிகிறேன். பிரதமர் சேனநாயகா சில மாதங்களுக்கு முன்னர் லண்டன் சென்றபோது, சேர் ஒலிவர் யூ.என்.பி. கட்சி அடுத்த பொதுத் தேர்தலுக்கான ஆயத்தங்களைச் செய்திருக்கின்றதா எனப் பிரதமரைக் கேட்டது மன்றிக் கொம்யூனிஸ்ட் பீதியைப்பற்றியும் பேசிப் பிரதமரைப் பயமுறுத்தியிருக்கிருர் எனத் தெரிகின்றது.

பிரதமருக்கு என்ன பதில் கூறுவதெனத் தெரியவில்லை. அவர், உடனே சேர் ஒலிவரை இலங்கைக்குத் திரும்பிக் கட்சிப் பிரசாரத்துக்கு ஆக வேண்டியவற்றைச் செய்யுமாறு தெரிவித்தாராம்.

மறுகணம் சேர் ஒலிவர் இலங்கை யாத்திரைக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து முடித்துவிட்டார்!

❁

### எல். ஆர். பி.

யூ. என். பி. என்ற அரசியற்கட்சி நாட்டில் இருப்பது போன்று எல். ஆர். பி. என்ற அரசியற் கட்சி சமீபத்திலே தோன்றியுள்ளது. லங்கா குடியரசுக்கட்சியைத்தான் எல். ஆர். பி. என்ற ஆங்கில எழுத்துக்கள் குறிப்பிடுகின்றன.

இப் புதிய கட்சியைச் சேர்ந்தவர்கள் அருமையான தமது நேரத்தை விரயஞ் செய்கின்றனர் என யூ. என். பி. குறைகூறுகின்றது.

சென்ற தேர்தலிலே தோல்வியுற்றவர்கள் ஒன்றுகூடி இக் கட்சியை உண்டாக்கியிருக்கின்றனர் என்ற பேச்சும் தென்னிலங்கையில் அடிபடுகின்றது.

❁

### சோதனை காலம்

இலங்கையிலுள்ள தமிழினத்துக்கு இப்போது ஒரு சோதனைகாலமென்றே கூற வேண்டும். தலைவர்களுக்கிடையே ஏற்படும் அபிப்பிராயபேதங்கள் தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சியையும் ஒற்றுமையையும் பாதித்துவிடுகின்றதெனயாழ்ப்பாணத்து மேயர் பொன்னம்பலம் அவர்கள் கருதுகின்ருர்.

❁

### தமிழருங் கொடியும்

தேசியக் கொடியிலே தமிழருக்கும் முஸ்லீம்களுக்குமெனப் புறம்பான நிறங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதை சேர் மகாதேவா நன்கு கண்டித்துள்ளார்.

இந்தியர் பிரஜா உரிமைச் சட்டமானது இலங்கையிலுள்ள தமிழர்களின் செல்வாக்குக்கு ஆபத்தை உண்டாக்கி யிருக்கின்றதெனவும் சேர் மகாதேவா கருதுகின்ருர்.

❁

### தமிழ் விழா

மொழியால் ஒன்றுபட்டவர்கள் எந்த நாட்டில் வாழ்பவராயினும் அவர்கள் வேறுபட்டவர்களல்லர் என்பதை எடுத்துக்காட்டி, ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்காக இலங்கைத் தமிழரும் இந்தியத் தமிழரும் நான்காவது தமிழ் விழாவைத் தமிழ் வளர்க்கும் யாழ்ப்பாணத்தில் நடாத்த முன்வந்துள்ளனர் எனச் சென்னைப் பத்திரிகை ஒன்று கூறுகின்றது.

இதைக் கேட்டு ஒரு சில இலங்கைப் பத்திரிகைகள் ஏங்கிப் பதறவேண்டியதேயில்லை.

❁

### திருக்குறள் ஆராய்ச்சி

திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு ஒன்றினை வெளியிடுவதற்குத் தமிழ்நாட்டு அறிஞர்கள் பலர் முயற்சிசெய்து வருகின்றனர். இந்த ஆராய்ச்சிப் பதிப்பைப் பாரதத்தின் ஜனுதிபதி இராஜேந்திர பிரசாத் அவர்கள் இம்மாதம் 7-ந் திகதி சென்னை செனட் மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கின்ருர்கள்.

# தமிழ்த் திருவிழா

## கலைக் காட்சி : ஒரு வேண்டுகோள்

தமிழ்த் திருவிழா இம் மாதம் 27, 28, 29-ந் திகதிகளில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியிற் கவின் பெற அமைக்கப் பெறும் பந்தரில் நடைபெறும்.

இவ்விழாவை முன்னிட்டுக் காட்சிப்பகுதி ஒன்றினைச் சித்திர வித்தியாதரிசி திரு. எஸ். ஆர். கனகசபை அவர்கள் ஒழுங்கு செய்து வருகின்றார். இக்காட்சிக்குத் தமிழரின் பழங்காலத்து நகைகள், சிற்பவடிவங்கள், அரிய ஏடுகள், புத்தகங்கள், கண்டெடுக்கப்பட்ட புதை பொருள்களின் புகைப்படப் பிரதிகள், பழைய நாணயங்கள், விழாக்காலங்களில் உபயோகிக்கப்படும் முக்கிய பொருள்கள், பழைய காலத்துச் சேலைகள், உடைகள் என்பன வேண்டியுள்ளன. இவற்றை வைத்திருப்பவர்கள் கோப்பாயில் வதியும் திரு. எஸ். ஆர். கனகசபை அவர்களுக்கு விபரங்களுடன் எழுதி அவற்றைக் காட்சிக்கு அனுப்புவதற்கான ஒழுங்குகளைச் செய்து கொள்ளலாம்.

விழா முடிவடைந்தபின்னர் அன்பர்களிடமிருந்து காட்சிக்கெனக் கிடைக்கும் பொருள்கள் திருப்பியனுப்பி வைக்கப்படும்.

### தமிழர்கலை

இக்காட்சியில் தமிழர் கலைப் பகுதியைச் சென்னை திரு. வி. எம். நரசிம்மன் அவர்கள் ஒழுங்கு செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இவர் தென்னிந்திய புராதன நாகரீகச் சின்னங்களின் ஆராய்ச்சி நிபுணராகவும், சிற்பக்கலை கோயில்களின் அமைப்புகளிலே தேர்ச்சி பெற்றவராகவும் விளங்குகின்றார்.

கலைக் காட்சியின் சிறப்புக்குத் தமிழ் அன்பர்களின் ஒத்துழைப்பும் உதவியும் பெரிதும் வேண்டப்படுகின்றன.

### சொற்பொழிவுகள்

இலக்கியம், சரித்திரம் விஞ்ஞானம் பற்றிய அறைவிற் பேரறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றுவார்கள். தென்னிந்தியாவிலிருந்து பின்வரும் பேரறிஞர்கள் விஜயம் செய்து சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள்:

தமிழ்ப்பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, டொக்டர் மு. வரதராசனார், பேராசிரியர் அ. ஸ்ரீனிவாசராகவன், பேராசிரியர் சேஷாத்திரி, ஸ்ரீமதி இராஜேஸ்வரி அம்மாள், சிவஞான இராமலிங்கயார், அனந்தவைத்திய நாதையர், பேராசிரியர் மீனாட்சி சுந்தரனார், டொக்டர் கிருஷ்ணன், பேராசிரியர் ஸி. எஸ். ஸ்ரீநிவாசாச்சாரியார், கலைவிமர்சகர் ஜி. வேங்கடாசலம்.

### விழா நிகழ்ச்சிகள்

தமிழ்த் திருவிழாவுக்கு அனைவரும் அழைக்கப்படுகின்றனர். சொற்பொழிவுகள், கலைக்காட்சிகள் போன்ற சகல நிகழ்ச்சிகளையும் அனைவரும் எவ்வித பிரவேசக் கட்டணமுமின்றிக் கேட்டும் பார்த்தும் அனுபவிக்கலாம்.

### நாடெங்கும் ஆதரவு

தமிழ் விழாவுக்கு ஆதரவளிப்பதற்கென வடமாட்சிப் பகுதியிலுள்ள சகல கிராமங்களிலும் இருந்து தமிழ்ப் பண்டிதர்களும் ஆசிரியர்களும் மற்றும் பிரமுகர்களும் அடங்கிய ஆலோசனைக் கூட்டமொன்று புலோலி வாசிகசாலையில் 1-4-51 மாலை 5 மணிக்கு நடைபெற்றது. திரு. ரீ. இராமலிங்கம் எம். பி. அவர்கள் தலைமை வகித்தார்கள். தமிழ் விழாச் செயலாளர் திரு. க. நவரத்தினம் அவர்களும், தனுதிகாரி டொக்டர் குருசுவாமி அவர்களும் விழா ஒழுங்குகளைப்பற்றிப் பேசினார்கள். வழக்கறிஞர் தனபாலசிங்கம் விழாவுக்கு வடமாராட்சிமக்கள் பூரண ஆதரவளிக்கவேண்டுமெனக் கூறினார். பின் ஒரு நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது. தலைவர் திரு. ரீ. இராமலிங்கம் எம். பி., உபதலைவர் முதலியார் சுப்பிரமணியம், காரியதரிசி எஸ். ஆர். கந்தசாமி, தனாதிகாரி திரு. சின்னையா. நிர்வாகசபை அங்கத்தினரும் தெரிவு செய்யப்பட்டனர். குறைந்தபட்சம் 2000 ரூபாயாவது திரட்டித் தமிழ் விழாவுக்கு உதவுவதென்றும் மற்றும் வேண்டிய உதவிகளை அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### அனுராதபுரம்

சமீபத்தில் அனுராதபுரத்திலுள்ள விவேகானந்த வித்தியாலயப் பரிசளிப்புக்கூட்டம் திரு. எம். ஸ்ரீகந்தா வி. ஸி. எஸ். அவர்களின் தலைமையில் சென்ற 30-3-51 ல் நடைபெற்றது. முதலியார் எஸ். சின்னத்தம்பி அவர்களும் திரு. ச. அம்பிகைபாகன் அவர்களும் ஏப்பிரலில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தமிழ்விழாவைப்பற்றிப் பேசினார்கள்.

விழாவுக்கு நிதி திரட்டுவதற்காக ஓய்வுபெற்ற வழக்கறிஞர் எஸ். நடராசா அவர்களைத் தலைவராகக்கொண்ட ஒரு நிர்வாகசபை அமைக்கப்பட்டுள்ளது.

### திருகோணமலை

திருகோணமலை இந்துக்கல்லூரி மண்டபத்திற் சென்ற 31-3-51-ல் திரு. எஸ். சிவபாலன் எம். பி. அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் முதலியார் சின்னத்தம்பி அவர்களும், திரு. எஸ். சிவபாலன் அவர்களும் தமிழ் விழாவைப்பற்றிச் சொற்பொழிவாற்றித் தமிழ்ப் பேசும் மக்களின் ஆதரவை வேண்டினர். பின்னர் திரு. சிவபாலன் அவர்கள் தலைமையில் ஒரு நிர்வாகசபை அமைக்கப்பட்டது.

நிதி திரட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

# தாராளமாக உதவுங்கள்

யாழ்ப்பாணத்தில் இம் மாதம் பிற்பகுதியில் நடைபெற விருக்கும் தமிழ்த்திருவிழாவைப் பற்றி நாம் விரித்துரைக்க வேண்டியதில்லை. சேர, சோழ, பாண்டிய நாடுகளில் முறையே சென்ற மூன்றுண்டுகளிலும் நடாத்தப்பட்ட இவ் விழா, இம்முறை ஈழ நாட்டில் விளங்கும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட வேண்டிய ஒழுங்குகளும் ஆயத்தங்களும் செய்தாகின்றன. தமிழ் மக்களாயுள்ளோர்க்கு இவ்விழா பெரிதும்ஊக்கத்தையும் ஆர்வத்தையுங் கொடுப்பதாகும். இலங்கையில் வசிக்கும் தமிழர் தமிழ் விருத்தியில் தென்னிந்திய சகோதரர்கட்கு எத்துணையும் குறைந்தவரல்லர் என்பதைக் காட்டும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. எனவே இவ் விழா சகல வைபவங்களுடன் இனிது நடந்தேறத் தமிழ் மக்களாயுள்ளார் யாவரும் ஒற்றுமையுடன் மிக்க அக்கறை காட்டியுழைக்க வேண்டும். இவ்விழாவினைக் குறைவின்றிச் சிறப்புடன் நடத்தி முடிக்கப் போதிய பணம்வேண்டும். தமிழனாகவுள்ள ஒவ்வொருவனும் இந்தப் பெரு முயற்சிக்குத் தாராளமாகப் பொருளுதவி செய்வது பெருங் கடமையாகும். இந்தியாவினின்று பெருந் தொகையாகத் தமிழ் வித்துவான்களும் இரசிகர்களும் வருகின்றனர். அவர்களை ஏற்ற முறையில் வரவேற்று உபசரிப்பது யாழ்ப்பாண மக்கள் ஒவ்வொருவரதும் பிரதம கடமையாகும். தமிழ் மக்களாயுள்ளோர் தமது தொன்மையை மறவாது அதற்கேற்ப முன்னேற்றமடைய வழி காண்பது அவசியமென்பதை எவரும் மறுக்கமாட்டார். இவ் விழா யாவர்க்கும் புத்துயிரளித்து மனாமயத்தை உண்டாக்குமென்பதிற் சந்தேகமில்லை. எனவே, தமிழராக உள்ளார் யாவரும் முன்வந்து இயன்ற சரீரவுதவியும் பொருளுதவியும் வழங்கி ஈழ நாட்டின் கௌரவத்தைப் பாதுகாப்பாராக.

# கிராம வாரம்

அகில இலங்கைக் கிராம முன்னேற்றப் பிரசாரம் 6-4-51 தொடக்கம் 12-4-51 வரை நடைபெறும்.

வலிகாமம் கிழக்கு, யாழ்ப்பாணத்தொகுதிப் பிரசார வாரம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்திலும் மைதானத்திலும் 8-4-51 ல் நடைபெறும். பொருட்காட்சி, வண்டிச்சவாரி, வாண விளையாட்டு, படக்காட்சிகள், பிரசங்கங்கள் என்பன முக்கிய அம்சங்களாகும். பொருட்காட்சிக்குக் கொண்டுவரப்படும் விசேஷப் பொருள்களுக்குக் கண்ணியமான பரிசுகளும் விளையாட்டுகளில் வெற்றி பெற்றவர்கட்குக்கிண்ணங்களும் வழங்கப்படும்

ஸ்தலஸ்தாபன மந்திரி பண்டாரநாயக்கா அவர்களும், கைத்தொழில்ஆராய்ச்சிப்பகுதி மந்திரி பொன்னம்பலம் அவர்களும் சமுகங் கொடுப்பார்கள்.

# மோட்ச வனத்தின் குளிர்மை

## வசந்த காலமும் காஷ்மீர் வனப்பும்

வசந்த காலம் பிறந்துவிட்டது. ஆயிரக்கணக்காகச் சுகஸ்தானங்களை நாடும் உல்லாசப் பிரயாணிகள் காஷ்மீரை நோக்கிச் செல்கின்றனர். இயற்கை வனப்புக்களும் கண்குளிர்ந்த காட்சிகளும் நிறைந்த காஷ்மீர் சமஸ்தானத்தில் யாவர் மனத்தையும் அளவு கடந்து வசீகரிப்பது பேர்போன காஷ்மீர்ப் பள்ளத்தாக்கிலுள்ள நந்தன வனமே. நிகரற்ற அழகும் கண் கொள்ளாக் காட்சியும் உடைய இப் பூந்தோட்டம் காஷ்மீரின் தலைநகராகும் ஸ்ரீநகருக்கு அணித்தாய் டால்வாவியின் ஓரமாக அமைந்துள்ளது. 'ஆநந்தவனம்' என்ற இன்னொர் பெயராலும் இது வழங்கப் படுவதுமுண்டு.

### குளிர் அருவி

ஸ்ரீநகருக்கும் இதற்குமிடையிலுள்ள தூரம் ஏழு மைல்தான். சாஜஹான் என்னும் மொகலாய சக்கரவர்த்தியின் விருப்பப்படி அஸப்கான் என்பவரால் அமைக்கப்பட்டதாகும். மிக விஸ்தீரணமுள்ள இந்த நந்தனவனம் டால்வாவியின் ஓரத்தில் இமயமலை யடிவாரத்தில் நின்று காட்சியளிக்கின்றது. இந்த நந்தன வனத்துக் கூடாக மலையிலிருந்து வரும் அருவி குதித்துச் செல்கின்றது. களைப்பும் அலுப்புமடைந்த பிரயாணிகள் இந்த நீரில் முழுகி உடம்பின் இளைப்பினை நீக்கிக் கொள்கின்றனர். வெல்வெற் பட்டுப் போன்ற மெதுமையான புற்றரைகளும், அவைகளையடுத்துப் பூஞ்செடிகளும், மத்தியில் ஊற்று நீர்த் தொட்டிகளும் தேவுலகமென்று சொல்லும்படி மிக்க இனிய காட்சி யளிக்கின்றன.

### 'காதல் மேடு'

இன்னொரு பூந்தோட்டம் இங்கேயுளது. அதன் பெயர் 'காதல் மேடு' இது மொகலாயச் சக்கரவர்த்தி ஜெஹான்கிர் என்பவரால் மிகவிசித்திரமாக அமைக்கப்பட்டுளது. கோடை காலத்தில் இவரது வாசஸ்தானமாக விளங்கிவந்தது. ஒன்பதினாயிரம் அடி உயரமுள்ள மாதேவ் என்னும் மலையின் அடிவாரத்திலுள்ளது. இந்த நந்தனவனம் ஸ்ரீநகரிலிருந்து இருமைலில் உள்ளது. வாவியைக் கடந்து வள்ளங்கள் மூலமாகவும் தெருவீதியால் மோட்டாராலும் இட்டிச் சேரக்கூடியது. இந்த நந்தனவனத்தில் ஒரு பரிசுத்தமான நீரூற்றுண்டு. இங்குஸ்நானஞ் செய்து மாற்ற முடியாத நோய்கள் நீங்கப்பெற்றவர்களும் அநேகர்.

### மோட்சவனம்

இவைகளன்றி ஸ்ரீநகருக்கு நாற்பது மைல்களுக்கு அப்பால் ஆநந்தா என்ற இடத்தை நோக்கிச் செல்லும் மார்க்கத்தில் இன்னோர் நந்தனவனமுண்டு. அங்குபனிக்கட்டி போல் குளிர்மையுடைய வாவியொன்றுண்டு. இந்த நந்தனவனமும் ஜெஹாங்கிர் சக்கரவர்த்தியால் அமைக்கப்பட்டது. மேற்கூறிய டால்வாவிக்கு மேலே 40 அடி உயரத்தில் மோட்சவனம் என்ற நந்தனவனம் உண்டு. இது அக்பார் சக்கரவர்த்தியால் அமைக்கப்பட்டது. இங்கும் பூச்செடிகளும் செயற்கை நீர்த்தொட்டிகளும் உயர்ந்த விருட்சங்களும் உண்டு.

இற்றைக்கு ஐந்நூறுவருடங்கட்கு முன்னர் அமைக்கப்பெற்ற இந்த நந்தனவனங்கள் இன்னும் புதியனவாய் மனரம்மியத்தை உண்டாக்கக் கூடியனவாய் இருக்கின்றன. அழகும் புனிதமும் உடையனவாய் இன்னும் காப்பாற்றப் படுவது போற்றத் தருவதாகும். வசந்த காலங்களிலும் கோடைகாலத்திலும் காஷ்மீர் செல்வோர் இக்காட்சிகளைக் கண்டு களிக்கின்றனர். உல்லாசப் பிரயாணிகட்கு இந் நாடு பெரு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் ஊட்டி வருகின்றது.

# ஸ்ரீ அரியநாயகம்

## தமிழ் விழாவுக்கு விஜயம்

வார்தாக் கல்வித்திட்ட நிபுணரும் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தின் செயலாளருமான ஸ்ரீ ஈ. டபிள்யூ. அரியநாயகம் அவர்கள், இம்மாதம் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்து, சென்னை தமிழ் வளர்ச்சிக்கழகத்தினரின் ஆதரவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழ் விழாவிற் பங்குபற்றுவாரென அறியக்கிடக்கின்றது.

# ஆசிய நாடுகள்

## ஒற்றுமை அவசியம்

ஆசிய நாடுகள் விரைந்து ஒற்றுமையடைய வேண்டிய அவசியத்தைப்பாரத நாட்டுத் தலைவர்கள் பலர் எடுத்துக் காட்டுகின்றனர். உலக சமாதானம் அப்போதுதான் நிலைபெறக் கூடுமென்பது அவர்களின் கட்சி. ஐரோப்பிய அமெரிக்க நாடுகளால் ஒருபோதும்உலகசமாதானம் நிலைபெறப் போவதில்லை. அந்நாடுகள் தலைமைக்கும் முதன்மைக்கும் வாதாடுகின்றன. அத்துடன் ஒன்றையொன்று அடக்கி ஆக்கிரமிக்கக் கங்கணங் கட்டி நிற்கின்றன. மேலும் ஆசிய நாடுகட்கிடையில் ஒற்றுமையுண்டாகப் பல்வேறு வசதிகள் உண்டு. இந் நாடுகள் நாகரிகம், கலாசாரம், பழக்க வழக்கம், உணவு, உடை, வாழ்க்கைமுறை என்பனவற்றில் ஒற்றுமையுடையன. அத்துடன் சமீபத்திற் சுதந்திரத்தைப் பெற்று முன்னேறியும் வருகின்றன. பொருளாதாரத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் உழைக்கும் இந்நாடுகள் தமக்குள் ஒற்றுமை பூண்டு தம்மைப் பெலப்படுத்திக் கொண்டால் மேலைத் தேசத்தவர் ஆசிய நாடுகளின் வளங்களைக் கவர இயலாது. எனவே, இந்நாடுகள் ஒன்றிற்கொன்று உதவிபுரிந்து மேனிலையடைவதிற் கண்ணுங் கருத்துமாகவிருக்க வேண்டியது அவசியமாகின்றது. அப்போதுதான் உலக சமாதானம் ஏற்பட இடமுண்டு.




**நவ இலங்கை: ஆசிரியர்கள்:** ஏ. ஏ. ஜே. ஹூலுகல்லே; குல. சபாநாதன்; பிரசுரம்: இலங்கை சமாசாரப் பகுதி; விலாசம்: தபால்பெட்டி 500, கொழும்பு.

எழிலார் இலங்கையின் சரித்திரம் எத்தனையோ பல ஆச்சரியமான சம்பவங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சரித்திர ஆராய்ச்சிக்கு வேண்டிய விஷயங்களை மாத்திரம் அடிப்படையாக வைத்துக்கொண்டு இப்போது பல நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும், சிங்களத்திலும் வெளியாகி வருகின்றன. இலங்கையின் பண்டைப் பெருமையையும் இன்றைய வளர்ச்சியையும் பொய்யோ, புனைந்துரையோ இன்றிச் சுவையாகக் கூறும் நூல் அழகான படங்களுடன் தமிழில் இதுவரை வெளியாகவில்லை. இக் குறைபாட்டினை நவ இலங்கை நிவிர்த்தி செய்திருக்கின்றதென்றே கூற வேண்டும்.

ஒளி அல்லது விளங்குதல் எனப் பொருள்படும் இலக்கம் அல்லது இலங்குதல் எனும் சொல்லில் இருந்தே இலங்கையெனும் பெயர் உண்டாயிற்று என அறிகின்றோம். ஈழம் எனும் பெயர் இலங்கை முழுவதற்கும் பொதுவாகவும் வடபாற் கூறுகிய யாழ்ப்பாணத்திற்குச் சிறப்பாகவும் வழங்கப்பட்டிருக்கின்றது.

இவற்றையெல்லாம் இரத்தினச் சுருக்கமாகத் தந்துள்ள ஆசிரியர்கள், ஆரியர் குடியேற்றம், பௌத்த மதம், மக்கள், இலங்கை வாழ் இந்தியர், நாட்டின் செல்வவளம், கல்வியும் சமுதாய சேவையும், என்பன பற்றிய முக்கிய விஷயங்களை சரித்திர மாணவர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் ஏற்ற முறையிற் சாதுர்யமாக எழுதியிருக்கின்றனர். இலங்கையின் குடிசனத் தொகையில் எட்டிலொரு பங்கினர் இந்தியர் எனத் தெரிகின்றது. இவர்களின் அந்தஸ்து, பிரஜா உரிமை, குடியேற்றம் சம்பந்தமான சட்டமும் அண்மையில் ஆக்கப்பட்டுள்ளன. குடியேற்ற நாடாக அடிமை நிலையிலிருந்த இலங்கையானது சுதந்திரம் பெற்றுச் சாம்ராச்சிய நாடுகளுடன் சரிநிகர் சமமாக நிற்கும் பெருமையை இன்று ஈட்டியுள்ளது. இந் நீண்ட வரலாறு ஒரு சிறு கதைபோல நவ இலங்கையில் மிளிர்கின்றது.

சுதந்திர இலங்கையில் இன்றைய ஆட்சிமுறை எவ்வாறு நடைபெற்றுவருகின்றதென்ற வரலாறு குறிப்பிடத்தக்கது. ஈழநாட்டு ஸ்தலங்கள் பற்றிய விபரங்களும், பிரதான கத்தோலிக்கக் கோயில்களும் மிகவும் உபயோகமான அம்சங்களாகும்.

இலங்கையைத் தரிசிக்க விரும்புபவர்கள் அவதானிக்கவேண்டிய குறிப்புக்களும் நூற்கண் சேர்க்கப்பட்டுள்ளன. பண்டைய கலைச் செல்வங்களையும் இன்றைய சிறப்பையும் துலக்கிக் காட்டும் புகைப்படங்கள் நவ இலங்கைக்கு தனிச் சிறப்பைக் கொடுக்கின்றன.

> நமது வாசிகசாலையில் விமர்சனத்துக்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதனைக் கவனிப்பாராக.

இலங்கைப் படம் ஒன்று இதிற் சேர்க்கப்பட வேண்டும். பளபளப்பான உயர்ந்த தாளிற் கவின்பெற அச்சிடப்பட்டுள்ள இப்பிரசுரம் கையடக்கமானது. இலங்கையின் எழிலை உள்ளும் புறமும் அப்படியே எடுத்துக் காட்டுகின்றது. இதன் ஆசிரியர்கள் இத்தகைய பணிக்கு வேண்டிய ஆற்றலும் பண்பாடும் வாய்ந்தவர்கள். இது போன்ற வேறு நூல்களையும் இவர்கள் வெளியிட்டு உதவுவார்கள் என எண்ண இடமுண்டு.

•

**1. என் பிரயாண நினைவுகள்:**
**2. ஆஸ்திரேலியாவில் ஒரு மாதம்:** ஆசிரியர்: சோம. லெ. இலக்குமணச்செட்டியார்; பிரசுரம்: பாரிநிலையம், 59, பிராட்வே; சென்னை-1. விலை: முறையே 1-8-0. 2-0-0.

இவ்விரு நூல்களும், அவற்றின் பெயருக்கேற்றுப் போல, பிரயாண நூல்களாகும். தமிழ் மாணவர்கள் சரித்திர, பூமிசாஸ்திர நூல்களைப் பரீட்சையிலே தேர்ச்சியடையும் நோக்கத்துடன் படிப்பதுண்டு. அதற்குக் காரணமாயிருந்த நோக்கம் நிறைவேறியதும், அத்தகைய படிப்பு முடிந்துவிடும் ஆனால் பிறநாட்டாரது வாழ்க்கை, அவர்களின் விருப்பு வெறுப்புக்கள், அவர்களது பழக்கவழக்கங்கள் இவற்றைப் பற்றிய அறிவு நம் நாட்டு மாணவர்களுக்கு இன்றியமையாதது. இவற்றைக் கற்றறிந்து, நல்லனவற்றைப் பின்பற்ற முயற்சிக்கவேண்டியது நம் மாணவர்களது கடனாகும். ஸ்ரீ சோம. லெ. இலக்குமணச் செட்டியாரவர்களால் எழுதப்பட்ட இவ்விரு நூல்களும். இத்தகைய தேவையை நிறைவுபடுத்த ஓரளவுக்கு உதவுவனவாக உள்ளன. இவ்விரு நூல்களும் அழகிய விளக்கப்படங்களுடன் கூடியன. இலகுவான, உயரிய தமிழில் எழுதப்பட்டன. கவர்ச்சியான அட்டைப் படங்களைக்கொண்டுள்ளன.

ஆசிரியர், மேலும் மேலும் இதேபோலப் பல பிரயாண நூல்களை எழுதித் தமிழ் மாணவர்களுக்கு உதவிபுரிவாரென எதிர்பார்க்கிறோம்.

—விவியன்

## பின்வந்த நூல்கள்

**பண்ணை வாழ்க்கை:** ஆசிரியர் ச. கு. கணபதி ஐயர்; பிரசுரம்; கிராமஜோதி நூலகம், 15/1, மந்தைவெளி லேன், மயிலாப்பூர், சென்னை 4; விலை: ரூ. 4-0-0.

**கீரையோகீரை:** ஆசிரியர்: ச. கு. கணபதிஐயர், எம். ஏ., பிரசுரம்: அமுதநிலையம் லிமிடெட், தேனும்பேட்டை, சென்னை 18; விலை: அணா 4.

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

# இது என்ன சர்வாதிகாரம்?

பட்டினப் பாகங்களிலும் பார்க்கப் பட்டிக்காட்டுப் பிரதேசங்களில் இலங்கை சுதந்திரம் பெற்று மூவாண்டுகள் முடிவுற்றும் அடிமை வாழ்வு அகலாதிருப்பது பெரிய மனவேதனையைத் தருவதாகும். வாய்கிடாச் சென்மங்கள் போன்ற பெருந்தொகையான ஏழைக் கிராமவாசிகள் இன்னுமே சுபீட்சமான வாழ்வு பெறாது வருந்துவதை யிட்டு எவர்தான் பரிதாபம் கொள்ளாதிருக்க முடியும். பிற சாகியத்தாராகிய மேலைத் தேசத்தார் ஆட்சிபுரியும்போதுதான் அடிமைவாழ்வு அடிமை வாழ்வு என ஆர்ப்பரித்து நின்றனர் சில போலி மேதாவிகள், இதோ சுதந்திரம் வந்துவிட்டது, விழித்தெழுங்களென ஆகாச வாணம் விட்டனர் சிலர்.

மாதோட்ட நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளை ஆராய்வாக உற்றுநோக்கின் அரசியல் சம்பந்தமாகவேனும் சமய, சாகிய சார்பாகவேனும் ஒருவித சுகித வாழ்வும் காண்பதற்கில்லை. எத்திசை நோக்கினும் வீண் புருடாக்களும், வெறும் சிலுசிலுப்புகளுமே தென்படுகின்றன.

இச் சந்தர்ப்பத்திற் பெரிய அரசியல் மேதாவி ஒருவரின் சர்வாதிகாரச் செய்கையை இங்கு குறிப்பிட வேண்டியிருக்கின்றது. அடம்பன் கிராமச்சங்கத்தின் வேண்டுகோட்படி அன்றொரு நாள் மந்திரி பண்டாரநாயகா அவர்கள் அடம்பனிலுள்ள பழைய கால ஆஸ்பத்திரியைப் பார்வையிட்டார்களாம். அவ்வேளை அவர்களை அங்கு ஆடம்பரமாக வரவேற்கவில்லையெனத் தெரிகின்றது. அது காரணமாக ஒரே அடியாக அப்பெரிய ஆஸ்பத்திரி ஒரு சிறிய மருந்துச்சாலையாக மாறிவிட்டதாம். சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட இப் பெரிய வைத்தியசாலையை முன்பின் யோசியாது ஏழை மக்களின் இன்னல்களை நோக்காது ஏதோ ஒரு காரணத்துக்காக மருந்துச்சாலையாக மாற்றியமை அடிமை ஆட்சி என்றே நான் சொல்லுகிறேன்.

இதுவிஷயமாக மாதோட்ட நாட்டு மக்கள் ஒருங்கு திரண்டு நடவடிக்கை எடுக்கவேண்டியதவசியமாகும்.

எஸ். ஏ. பிள்ளை

மாதோட்டம்
27-3-51

•

## சீமெந்துவிலைமாற்றம்

விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கும் விலைவாசிகளின் பயங்கரச் சதியிற் சிக்கிப் பதறிக்கொண்டு தவிக்கும் ஏழை மக்களும், சுழன்றுகொண்டிருக்கும் நடுத்தரமக்களும், உணவுக்காகவும், உடைக்காகவும் கலக்கியதோடு உறையுளுக்குந் திண்டாடுகின்றனர்.

வாடகை வீட்டிலும், வசதியற்ற, சுகங்கெட்ட வீட்டிலும் வசித்து மனத்துயரால் சலிப்படைந்த நடுத்தர மக்கள் தத்தமக்கோர் வீடமைக்கப் பற்பலவாறு சிந்தித்தும், சீமெந்து விலையும் உச்சாணிக்கொப்பை எட்டிவிட்டதே என்ற பயங்கரத்தோடு காங்கேசன் சீமெந்தின் விற்பனவு காலத்தை நோக்கிக் கடுந்தவஞ் செய்த வருடங்கள் பலவுண்டு.

நமது சொந்த நாட்டுப் பொருள் வந்துவிட்டால் ஐந்தரை ரூபாவுக்கும், நாலரை ரூபாவுக்கும் ஒரு அந்தர் சீமெந்து பெறலாகுமென்று மனப்பால்குடித்த 49-ம் 50-ம் ஆண்டுகள் ஓடிமறைந்தன.

கைத்தொழில், மீன்பிடி மந்திரியின் விடா உழைப்பால் 51-ம் ஆண்டில் பொதுப் பாவனைக்குவந்த சீமெந்தைக் கண்ட நடுத்தர மக்கள் விற்பனவுத் தலங்களை எதிர்பார்த்து ஏங்கினர். காலமும் நேரமும் வந்தன; காங்கேசன் சீமெந்தும் தலை காட்டியது. பணமுள்ள ஒருசிலர் சீமெந்து வந்த உடனே பல மூறைகளைக்கையாண்டு சீமெந்துபெற்றுக்கொண்டனர். பணத் தாழ்வால் தருணத்தைத் தவறவிட்ட நடுத்தர மக்கள் பலர் அடுத்த முறையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கையிற் கைத்தொழில் மந்திரியின் புதிய அறிக்கையைக் கண்டு திடுக்கிட்டுவிட்டனர்.

அதிகாரம்பெற்ற விநியோகஸ்தர் முறைகளில் குறைகளிருப்பது கண்டுபிடிக்கப் பட்டதாம். இறக்குமதிச் சீமெந்துகள் பத்தரை ரூபாவும், ஒன்பது ரூபாவும் விற்பனவாகின்றனவாம். (இது மந்திரியவர்கட்கு முன் தெரியாது போலும்). அதற்காகத் தொழிற்சாலையிலேயே சீமெந்து எடுக்க ஒழுங்குபண்ணுகிறாராம், அதோடு அந்தருக்குச் சதம் 75ஐயும் கூட்டிவிட்டாராம். இவைகளால் இனிப் பொதுச் சனங்களுக்கு இலேசாகவும், மலிவாகவும், தேவைக்குப் போதியளவும் கிடைக்குமென்பது மந்திரியின் நியாயமுடிபுபோலும்.

மற்றைய பொருள்களின் விலை அளவுக்கு மிஞ்சி ஏறுமல் கட்டுப்பாட்டையோ, முறையான விநியோகத்தையோ செய்து சனங்களின் கஷ்டத்தை நீக்கித் தேவையைப் பூர்த்திசெய்யவேண்டிய அரசாங்கம் தனது பொருளுக்குக் 'கிராக்கி' உண்டுபட்டதென்று இரண்டொரு மாதத்திற்கிடையிலேயே இப்படி விலை மாருட்டம் செய்வதானால் விலையேற்றும் வியாபாரிகளைத் தண்டிக்க முற்படுவது தான் எப்படியோ? இன்னும் சில மாதத்தால் 'கிராக்கி' ஏற்பட்டுவிட்டதென்று 75 சதம் ஏற்றிக்கொண்டுபோனால் இவ்வருட முடிவுள் இறக்குமதிச் சீமெந்தையும் விலையிற்தாண்டிவிடும்போலும். சுதேசத் தொழிற் பொருட்கள் விற்பனவாகாததற்கும், தொழிற்சாலைகள் சில மூடப்படுவதற்கும் இப்படியான பிழையான முறைகளே காரணங்களாகும்.

மன்னூர்மணி

மன்னூர், 26-3-51

•

## மிருகபலி வேண்டாம்

சைவக் கோயில்களில் அநேக ஊழல்கள் இருப்பதால் அவற்றை விசாரணை செய்வதற்கு அரசினரால் ஒரு விசாரணைச்சபை ஏற்படுத்தப்பட்டது. அச் சபைக்குப் பல சைவர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர். அவற்றுள் கோயில்களில் மிருகபலியை நிறுத்தவேண்டுமென்பதும் ஒன்று. மிருகபலியைச் சட்டத்தின் மூலம் நிறுத்தாது சைவ அன்பர்களின் உதவியுடன் நிறுத்துவதே மேலானதென விசாரணைச் சபை தீர்மானித்தது.

மிருகபலி நடைபெறும் சில கோயில்களில் இக்கிளர்ச்சி காரணமாக சைவ அன்பர்கள் சபைகூடி ஒருதவணை குறித்து அத் திகதிக்குப் பின் அக் கோயில்களில் மிருகபலியிடுவதில்லையெனத் தீர்மானித்துவிட்டனர். சுன்னாகம் ஐயனார் கோவிலிலும் ஆடு கோழி பலியிடுதலை நிறுத்தி விடுமாறு அன்பர்களைத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு தாய்

கோட்டடி, கொழும்பு
23-3-51

## தமிழ் ஆசிரியர்கள் உரிமை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளமையும் இங்கு குறிப்பிடற்குரியது. சுவாமிகள் தங்கள் அடுத்த பதிப்பில் இச் சிறு பிழையைத் திருத்துவதோடு, தற்போதையப் பிழையைத் திருத்தும்படி பத்திரிகைகள்மூலம் அறிவிக்கவேண்டியதும் அவசியமாகும்.

### திருகோணமலை உயர்வு

திருகோணமலைக்கு எப்படியாவது நகரசபை (முனிசிப்பல்) அந்தஸ்துப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று சிலர் விரும்புகின்றனர். அவர்களில் முக்கியமானவர்கள் பட்டின சபைத் தலைவரும் திருகோணமலைப் பிரதிநிதியுமாவர். பதவி உயர்வை விரும்பிப் பட்டினசபை உத்தியோகஸ்தர்களும் இதிற் கவனஞ் செலுத்துவதாகத் தெரிகிறது. இம் முயற்சிக்குப் பொதுமக்களிடையே பெரிய எதிர்ப்பு இருந்து வருகின்றது. இரு கட்சியினரும் தங்கள் காரணங்களைக் காட்டி மந்திரிக்கு விண்ணப்பம் தயாரித்து அனுப்பியுள்ளார்கள். இதற்குச் சரியான வழியை மொறட்டுவாப் பட்டினசபை காட்டியிருக்கின்றது. ஒரு பொதுத் தேர்தல்மூலம் சனசம்மதம் அறிந்து அதன்படி தீர்ப்பை ஏற்பதே சனநாயகமுறையாகும்.

### சேவைக்கு மதிப்பு

திருமதி குரேவ்ற் அம்மையார் கடந்த முப்பது வருடங்களாக வின்சன்ற் பாடசாலையின் ஆசிரியையாகவிருந்து சேவை செய்து தமது தாய் நாடாகிய இங்கிலாந்து திரும்பவிருக்கும் தறுவாயில் அவரது சேவையைப் பாராட்டுவதற்காகப் பலவித கொண்டாட்டங்கள் இங்கு நடந்தன. அவரது ஞாபகமாக குரேவ்ற் மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. மட்டக்களப்புப் பொதுமக்கள் சார்பில் ஒரு பிரியாவிடை நடத்தப்பட்டது. குரேவ்ற் அம்மையார் தமது சேவைக் காலத்தில் இப்பகுதிக் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டுள்ளார் என்பது பாராட்டுதற்குரியது. விசேஷமாக முஸ்லீம் மாணவிகள் ஆங்கிலக் கல்வி பயில்வதற்கு இவரே சந்தர்ப்பம் அளித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

## பிரிட்டிஷ் வானொலி தமிழ் ஒலிபரப்பு நிறுத்தப்படும்

பிரிட்டிஷ் வானொலி நிலையத்தில் (பி. பி. ஸி) தமிழ், மாரத்தி, வங்காளி மொழிகளிற் நடைபெற்றும் வரும் ஒலிபரப்பு ஏற்பாடுகள் நிறுத்தப்படுமெனத் தெரிகிறது.

ஹிந்தி ஒலிபரப்பு தொடர்ந்து நடைபெறுமென அறியக்கிடக்கின்றது.

திருக்குறளை உலகமறியச் செய்ததைப்போற் சிலப்பதிகாரத்தையும் உலக மொழிகளில் மொழி பெயர்த்துப் பரப்பினால், தமிழர் பெருமையை உலக மக்கள் அறிவார்கள்.

# ஆற்றல் மிகுந்த காவியம்

## விளம்பரத்தை விரும்பாத தமிழர்

சென்றவாரம் சென்னைமா நகரிலே அமைக்கப் பெற்ற கண்ணகி பந்தலிற் சிலப்பதிகார மகாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்ப் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் மகா நாட்டினை ஆரம்பித்து வைத்தார்கள். டொக்டர் வரதராசனார் அவர்கள் தலைமை தாங்கிப் பேசிய அரிய சொற்பொழிவின் சாரம் இது.

சிலப்பதிகாரம் நம் தாய் நாட்டின் "காவியம்; நம் தாய் நாட்டில் ஒரு காலத்திலே நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட காவியம்; அதனால் அது நம்மை வளர்த்துப் பண்படுத்தும் ஆற்றல் மிகுந்த காவியம்.

காவியம் எழுதிய புலவர் வெறும் கலைஞராக மட்டும் இருந்தால், அதன் பலன் வேறு; படிப்பவர்க்குக் கலையுணர்ச்சி ஊட்ட அந்தக் காவியம் பயன்படும்.

### அறத்தின் உருவம்

இன்றைய உலகத்தில் காணும் காட்சிகளை இருவகையாகக் கூறலாம். துன்பமே பட்டுப்பட்டு, அது இயற்கை என்று உணர்ந்து துன்பச் சேற்றில் நெளியும் வாழ்க்கையின் காட்சிகள் ஒருவகை. மற்றொருவகை, பிறர்க்குத் துன்பம் விளைத்து விளைத்து, அதனால் உலக வாழ்க்கையில ஆற்றலைப் பெருக்கிப் பெருக்கி ஆடம்பரக் கோட்டைகள் கட்டி இறுமாந்திருக்கும் வாழ்க்கையின் காட்சிகள். இந்த இருவகையும் உள்ள உலகத்தில் மனச்சான்று என்னும் சாக்கைக் காணவே முடியாது. அதனால் துன்பம் செய்வோர்க்குமட்டும் அல்லாமல், துன்பப்படுவோர்க்கும் மனச்சான்று இல்லாமல் போகின்றது. இந்த நிலை நீடிக்கும் வரையில் அறநூல்கள் பெருகியும் பயன் விளையாது. காந்தி அடிகள் போன்ற அறத்தின் திருவுருவங்கள் பெருகியும் பயன் விளையாது. "இந்த உலகத்தில் உண்மைக்கும் நேர்மைக்கும் இடம் ஏது? நன்றி கெட்ட உலகம்" என்று துன்பப்படுவோர் சோர்ந்து மடியும் காலம் இது. "இந்த உலகத்தில் இரக்கமும் நன்னெறியும் கொண்டு வாழ்ந்தால் உயிர் வாழவே முடியாது; மற்றவர்களைப்போல் நாமும் எப்படியாவது சுரண்டினால்தான் வளமாக வாழ முடியும்—நெறியையும் முறையையும் எண்ணித் தயங்கினால் ஓட்டாண்டியாய்த் துன்பத்திற்கு ஆளாக வேண்டும்" என்று துன்பப்படுத்துவோரும் கல்நெஞ்சம் பெறும் காலம் இது.

பேராசிரியர்
— மு. வரதராசனார் —

### கண்ணீரின் ஆற்றல்

ஆனால் சிலப்பதிகாரத்தில் காணும் உலகம் முற்றிலும் வேறானதாக இருக்கிறது. பெண் ஒருத்தி பெருந் துன்பத்திற்கு ஆளானாள்; அவளும் திக்கற்றவள்; வெளிநாட்டைச் சார்ந்தவள்; நேற்றுத்தான் நகரத்திற்கு வந்தவள். அந்தப் பெண்ணுக்குத் துன்பம் விளைவிக்கக் காரணமாக இருந்தவனோ, பெரிய அரசன்; தான் இட்ட சட்டத்திற்குக் குறுக்கே பேசுவோர் இல்லாத வகையில் நாட்டின் தலைமை பெற்றுத் தனியரசு செலுத்தியவன். சிலப்பதிகாரம் என்ன காட்டுகின்றது? அந்தப் பெண்ணின் துயரக் கண்ணீர்க்கு முன்னே பெரும் படை உடைய வேந்தன் சோர்ந்து மடிவதைக் காட்டுகிறது. துன்புறுத்துவோரின் பெரிய ஆற்றல் துயரப்படுவோரின் பெரிய ஆற்றல், துயரப்படுவோரின்சிறு கண்ணீர்த் துளிகளுக்கு முன் தேய்ந்து மாய்வதைக் காட்டுகின்றது.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத
கண்ணீரன்றே
செல்வத்தைத்தேய்க்கும்படை"

என்று திருவள்ளுவர் உணர்த்திய உண்மைக்கு இந்தக் காவியம் ஒரு விளக்கமாகத் திகழுகின்றது. ஆசிரியர் இளங்கோவடிகள் இந்தக் குறள் மணியை நினைவில் வைத்துக்கொண்டே,

'கண்ணகீர், கொல்ல உயிர் கொடுத்த கோவேந்தன் வாழியரோ' என்று எழுதியுள்ளார்.

அரிசியிலே தவிட்டையும், பருப்பில்கல்லையும் கலந்தாவது பணம் சேர்த்துப் பெருவாழ்வு வாழக் கருதும் விலங்கு மனம் மலிந்துள்ள இந்த உலகச் சிறையிலிருந்து சிறிது நேரமாவது உயர்ந்த நல்லுலகத்தில்—கற்பனை உலகத்தில்—பறந்து திரியச் சிலப்பதிகாரம் வாய்ப்புத் தருகிறது. பெண் ஒருத்தியின் கண்ணீரைக் கண்டு தன் தவறு நினைந்து "யானோ அரசன்? யானே கள்வன்?" என்று உயிர் துறக்கும் மனச்சான்றைக் காட்டும் காவியம் இது.

### ஒரு தனி இமை

நினைத்துப் பார்க்க வியப்பாக இருக்கிறது; இன்று கண்ணகியை நாம் போற்றுகிறோம்; பாராட்டுகிறோம்; தமிழர் தவிர வேறு இனத்தாரிடையே கண்ணகி பிறந்திருந்தால், இன்று உலகம் புகழும் தலைவரிடையே முதன்மை பெற்றிருக்க முடியும். ஆனால் தமிழினம் விளம்பரத்தை விரும்பாத, விரும்பினும் செய்துகொள்ள அறியாத, ஓர் இனம்; தன்னைப்பற்றி வரலாறு எழுதி வைக்கவும் முயலாத ஒருவகை இனம்; தன் செல்வத்தை எல்லாம் பிறர் தமது தமது என்று கூறும் பெருமையே கொண்டாலும் பொறுமையோடு மகிழ்ந்திருக்கும் ஒரு தனி இனம்; அதனால் உலகம் போற்றத்தக்க கற்பரசியான கண்ணகி தமிழகத்தில் தமிழரும் நன்கறியாத தலைவியாக ஒதுங்கி யிருப்பதைக் காண்கிறோம். ஆயினும் எப்படியோ கற்றவரேனும் அறிந்து போற்றத்தக்க நிலை ஒருவாறு இருக்கின்றது. செங்குட்டுவன் எழுப்பிய கற்கோயில் இதற்குக் காரணம் அன்று; அவன் தம்பியர் எழுப்பிய சொற் கோயிலே உண்மையில் காரணம் ஆகும்.

தமிழகத்தில் மட்டும் அல்லாமல் இலங்கை முதலிய வெளிநாடுகளிலும் கண்ணகிக்கு வழிபாடு நடைபெற்றது. இன்னும் அந்த ஆணையே நிறைவேறுகிறது; பல நூற்றாண்டுகளாகத் தமிழ்ப் பொதுமக்கள் மறந்திருந்த கண்ணகியின் புகழ் மீண்டும் விளங்கத் தொடங்குகிறது. கற்பு நெறியில் நின்று வாழ்க்கையை விளக்கிய ஒரு பெண் மற்றொருத்தியைப் போற்ற வேண்டுமென்று திண்ணமாக எண்ணிய எண்ணம், முற்றத் துறந்த துறவியான இளங்கோவடிகள் முதல் பெரு வேந்தர்கள் வரை யாவராலும் போற்றப்பட்டு நிறைவேறியது. ஆகையால் காவிய மாநாடு கூட்டிப் பாராட்டும் இம்முயற்சியும் இனிது நிறைவேறுவது உறுதி.

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா ,34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்

[4270]

# மாபெரும் நகரசபை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வீடுகளை வாடகைக்குக் கொடுக்கும்போது வீட்டின் விசாலத்தை அவதானிப்பதோடு குடியிருப்பவர் என்ன சம்பளம் பெறுகின்றார் என்பதையும் அவதானிக்கின்றார்கள். வாடகைக்கு எடுப்பவர் பெரிய குடும்பஸ்தராய்க் குறைந்த வேதனம் எடுத்தால் வீடு எவ்வளவு பெரிதாயிருந்த போதிலும் குறைந்த வாடகைக்கே கொடுபடுகின்றது. ஆகவே வறியவர்களுக்கு இங்கிலாந்தில் இதுபோன்ற பல நன்மைகளை அரசாங்கம் செய்துவருகின்றது. இப்படி இருப்பதினாற் கொம்யூனிசம் அல்லது பொதுவுடைமைக் கொள்கை இங்கே பரவுவது குறைவு.

### மேயருடன்

இந்த நகரசபை பல வாசிகசாலைகளை நடாத்துகின்றது. புத்தகங்களும், சஞ்சிகைகளும், இசைத் தட்டுகளும் வாசிகசாலையின் அங்கத்தினரின் உபயோகத்துக்கு இனமாகக்கொடுபடுகின்றன. இவற்றையெல்லாம் காண்பித்த பின்னர் நகரசபையின் உத்தியோகஸ்தரொருவர் என்னை மேயரிடம் அழைத்துச் சென்றார். அப்போதிருந்த மேயரின் பெயர் திரு. டபிள்யூ. ஈ. றயிஸ். இவரை ஒருமுறை கண்டால் மறக்கவே முடியாது. சாமானியமான கதிரையில் இவர்இருக்கமாட்டார். மேயரானபடியால் இவருக்கு விசேஷ பெரிய கதிரை உண்டு. மேயர்ப் பதவியை இவர் விடுங் காலத்தும் இவரின் பெருப்பத்திற்கேற்ற விசாலமான கதிரையே வேண்டும். என்னைச் சந்தித்ததும் இவர் தாராளமாகச் சிரித்து வரவேற்றார். இலங்கையைப் பற்றியும் இலங்கை வாசிகளைப் பற்றியும் பல விஷயங்களை ஆவலோடு கேட்டார். அரை மணி நேரம் வரையில் சிற்றுண்டியும் தேநீரும் அருந்திக்கொண்டு சம்பாஷித்தோம். மேயருடன் என்னை வைத்துப் புகைப்படம் பிடித்தார்கள். அப்போது மேயர் நாம் சிரித்துக்கொண்டிருந்தால் நன்றாக இருக்குமென்று கூறினார்.

அவரைக் காணுந்தோறும் உண்டாய சிரிப்பைக் கஷ்டத்தோடு அடக்கிக்கொண்டிருந்த எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது என்று நினைத்துத் தாராளமாகச் சிரித்தேன். மேயரும் உடம்பு குலுங்கக் குலுங்கக் கெக்கட்டமிட்டார். எமது மட்டக்களப்பு நகரசபை அக்கிராசனர் திரு. செல்வநாயகம் அவர்கள் இதைப்பற்றி என்ன கூறுவாரோ? சிரிப்பார். நன்றாகச் சிரிக்கட்டும். சிரிப்பு ஆரோக்கிய வாழ்விற்கு இன்றியமையாதது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள் அல்லவா?

—தொடரும்

# வடமாகாண ஆசிரியர்கள்

## சகாய நிதிச் சங்கம்


வடமாகாண ஆசிரிய சகாய நிதிச் சங்கத்தின் பதினேழாவது ஆண்டு இறுதிக் கூட்டம் சமீபத்தில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. 1950-ம் ஆண்டு டிசம்பர் 31 வரையுள்ள காரியதரிசி அறிக்கையும், தனாதிகாரியின் பரிசோதனைசெய்த கணக்கு விபரமும் சமர்ப்பிக்கப்பட்டுச் சபையாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. டிசம்பர் 31 வரையுள்ள அங்கத்தவர்கள் மொத்தம் 637 ஆகும். இவர்களுக்குரிய பணத்தொகை ரூபா 132603-37 சதம். சென்றவருடத்தில் சேவையிலிருந்து இளைப்பாறிய அங்கத்தவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட கட்டணமாகவும், சகாயப்பணமாகவும் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 11035-39 சதம். மூலநிதி யொன்று நிறுவவேண்டுமென நிர்வாக சபையாரால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் ஏகமனதாக அங்கீகாரம் பெற்றது. எட்டு வருடம் அங்கத்தவர்களாகவிருந்து இறப்பவர்களுக்குத்தான் முழுச் சகாயமும் கொடுபடவேண்டுமென்ற நடைமுறையிலிருக்கும் சட்டத்தை மாற்றி, இனிமேல் மூன்று வருடம் நிரம்பியவுடன் மரண சகாயம் கொடுபட வேண்டுமென்று திரு. கே. வேலுப்பிள்ளையவர்களாற் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது. இதுவரை தலைவராயிருந்து அண்மையில் இளைப்பாறவிருக்கும் திரு. எஸ். சுவாமிநாதனவர்களுக்கும், திருவாளர்கள் ஏ. வி. சுந்தரம் பிள்ளையவர்களுக்கும், ரீ. வி. செல்லப்பா அவர்களுக்கும் நன்றி கூறும் முகத்தால், அன்னவர் சங்கத்தின் வளர்ச்சிக்குக் கண்ணுங் கருத்துமாகப் பல துறைகளிலும் செய்த அரும் பெரும் சேவைகளைக் குறிப்பிட்டு அவர்களின் சலியா உழைப்பையும், குன்றா ஊக்கத்தையும் வியந்து திரு. வி. ஓ. எலியாஸ் அவர்கள் பாராட்டினார்கள். பின்வருமாறு புது வருட உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: திரு. ச. அம்பிகைபாகன் பி. ஏ, உபதலைவர்: திரு. எம். வைத்திலிங்கம், காரியதரிசி: திரு. வி. வைரமுத்து பி. ஏ, உபகாரியதரிசி: திரு. கே. சோமசுந்தரம், தனாதிகாரி: திரு. பி. தம்பு. நிர்வாகசபையினர்: திருவாளர்கள் ஈ. குமாரசாமி, வி. ஓ. எலியாஸ் பி. ஏ, கே. தம்பாப்பிள்ளை, கே. நல்லதம்பி, ஏ, இளையதம்பி, எம். சிற்றம்பலம், எஸ். முருகேசு, ஆர். இளையதம்பி, எம். சின்னத்தம்பி பி. ஏ, கே. நவரத்தினம்.

# பேச்சுப் போட்டி

## பெண்மணி வெற்றி

பருத்தித்துறை மெதடிஸ்ட் பெண்கள் உயர் நிலைப் பள்ளியில் சமீபத்தில் நடைபெற்ற தமிழ்ப்பேச்சுப் போட்டியில் செல்வி பி. சா. ஜெயதேவி முதலாவது பரிசு பெற்றார். இவர் "இன்றைய இலங்கைப் பெண்கள் கடன்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்.




அன்பான மருமக்களே,

வணக்கம். லண்டன் நகரத்திலே குழந்தைகள் தங்குவதற்கென ஒரு பெரிய விடுதி இருக்கின்றது. அவசர அலுவல்களுக்கிடையிற் பிள்ளைகளைக் கவனிக்க இயலாதவர்கள் இவ் விடுதியில் அவர்களைத் தங்கச் செய்கின்றனர். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இது ஆரம்பிக்கப்பட்டது. இப்போது இங்கு 2,000 பிள்ளைகள் இருக்கின்றனர். உலகத்திலுள்ள பல்வேறு சாதியைச் சேர்ந்த குழந்தைகளை இங்கு காணலாம்.

ஐரோப்பாவுக்குப் பெற்றோருடன் செல்லுங் குழந்தைகளே இங்கு தங்கிவருகின்றனர். இரண்டு மூன்று தினங்களுக்குத் தங்கள் பிள்ளைகளை இவ்விடுதியிற் சேர்த்துவிட்டுத் தாய் தந்தையர் தங்கள் வேலைகளைப் பார்த்து முடிக்கின்றனர். பிள்ளைகள் அங்கு சகல வசதிகளுடனும் சந்தோஷமாகக் காலங் கழிக்கின்றனர்.

இவ் விடுதியிலே சேரும் பிள்ளைகளுக்கு எவ்வித நோய் நொடியும் இருக்கக் கூடாது. இதற்கு வைத்தியர் ஒருவரின் அத்தாட்சிப் பத்திரம் அவசியமாகும்.

லண்டன் இங்கிலாந்தின் தலைநகரமாகும்.

* * *

பிள்ளைகளே நான்காவது தமிழ்த் திருவிழா இம்மாதம் 27 28-29-ம் திகதிகளில் நடைபெறும் தென்னிந்தியாவிலுள்ள சிறந்த அறிஞர்கள் விழாவிற் பங்கு பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள். தமிழ் இசைக் கச்சேரியும் நடைபெறும்.

கேசரிமாமா

### கவனியுங்கள்

பாலர் பகுதியிற் சேரவிரும்பும் பிள்ளைகள் ஈழகேசரிப் பத்திரிகையில் வெளியாகும் பிரவேசப் பத்திரத்தை நிரப்பி அதை வெட்டி அனுப்பவேண்டும். வெறுங் கடதாசியிற் பெயரையும் விலாசத்தையும் எழுதியனுப்பிவிட்டுத் தம்மைப் பாலர் பகுதியிற் சேர்க்குமாறு பலர் எனக்கு எழுதுகின்றனர். ஈழகேசரிப் பத்திரிகை இடையாதுவிட்டால் ஈழகேசரி நிலையத்துக்குப் பணம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

## பெண்கள் முன்னேற்றம்

மே.394. த. ஜெயலட்சுமி

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்று நம் முன்னோர் பெண்களை மட்டந் தட்டிக் கொண்டிருந்த காலத்தில் "ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார், வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்று பெண் சமூகத்தைத் தட்டி எழுப்பிவிட்டார் நம் அமரகவி பாரதியார்.

பெண்கள் பல துறைகளிலும் முன்னேறி வரும் இக்காலத்தே பெண் கல்வியை நாம் தடை செய்ய முடியுமா? ஏன் ஆண்களைப்போலப்பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ முடியாது. அவர்களைக் கோழை மனத்தினர் என்றும், பெண்புத்தி பின்புத்தியென்றும் பல மூடர்களின் பிதற்றல்களை எடுத்துக் கையாண்டு பெண்களை இழிவு படுத்துகின்றனர். உண்மையில் அவர்கள் அறிவில்லாதவர்களா? அவர்களுக்குப் பல படிகளிலும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது ஆண்களின் கடமையல்லவா? எப்பொழுதும் ஆண்களுக்குக் கட்டுப்பட்டு வெளியுலகம் அறியாது வீட்டுக்குள்ளே பதுங்கியிருப்பது நியாயமாகுமா? இன்று எத்தனையோ பெண் திலகங்கள் பெரிய, பெரிய மேதாவிகளாக விருக்கின்றார்கள். அவர்களைக் கண்ணாரக் கண்டாவது நம் பெண் சமூகம் விழிப்படையவேண்டாமா? தொட்டிலை ஆட்டும் கையே தொல்லுலகை ஓச்சும் கை என்பதை அறியோமா? வெற்றிக் கொடி நாட்டி வீரச் சங்கை ஊதி ஒற்றைத் தனி ஆட்சி நடத்திய விக்ரோறியா மகாராணி, இந்தியாவின் இன்னலைத் தீர்த்த பண்டித விஜயலட்சுமி, கவிக்குயில் சரோஜினி தேவி முதலியோர் யார்? இவர்கள் எல்லாம் பெண்கள் அல்லவா?

இக்காலத்திலும் பெண்களை இழிவு படுத்திக்கூறும் மூடர்களின் கொள்கைக்குச் செவி சாய்ப்போமானால் நாம் முன்னேற்றம் அடையமுடியாது. சகோதரிகளே! நாம் ஏன் இன்னும் கண் மூடித்தனமாய் இருக்க வேண்டும்? மூடக் கொள்கைகளையும் பழக்கவழக்கங்களையும் தள்ளவேண்டும். பெண்களாகிய நாம் சகல துறைகளிலும் முன்னேற வேண்டும். ஆண்களைப்போல் சரி நிகர் சமானமாக வாழவேண்டும்.

வெளி நாடுகளுக்குச் சென்று பல் வகையான கல்விகளும் கற்றுவர வேண்டும். பெண் சமூகத்தார் முன்னேற வேண்டும். நாட்டில் அறிவுச் சுடர் கொழுந்துவிட்டெரிய வேண்டும். நாமும் நம்முன் புகழுடம்பு பெற்ற பெண் திலகங்களாகவே வாழவேண்டும். இனிமேலும் நாம் சும்மாவிருக்க முடியாது.

## வயலில் நாடகம்

மே. 71 வி. கந்தவனம்

சமீபத்தில் எமது வயலில் அருவடை நடைபெற்றது. அன்று நானும் அங்கு சென்றிருந்தேன். ஒன்பது ஆண்கள் அருவி வெட்டிக்கொண்டிருந்தனர். நான் ஒரு வரம்பில் உட்கார்ந்தேன். சிறிது நேரம் சென்றபின் ஒருமனிதன் "என்ன? உசாரைக் காணேன்? அறு, அறு ......" என்று கூறினான். நானும் அவர்களின் வேலையைக் கண்குளிரப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

இப்படி அவர்கள் அறுத்துக் கொண்டு போகையில், ஒருவன் "ஏ......ய்! பள்ளிச்சி பள்ளன் எங்கடி போனான்? என்று உரக்கப் பாடினான். இப்பாட்டு முடிவதற்கிடையில் இன்னொருவன் "ம்...... பள்ளம் பார்த்துப் படி வெட்டப் போனான்" என்று பாடினான். பின்னும் இருவரும் தொடர்ந்து பாடினார்கள். அட! மிகுதியை மறந்து விட்டேன்.

என்ன ஆச்சரியம்! அவர்களில் இருவர் பள்ளியாகவும் வெள்ளாளனாகவும் மாறி விட்டார்கள். அதுவுமன்றி வயலும் ஒரு நாடக மேடையாகி விட்டது.

இவர்களின் பாட்டு முடிந்தவுடன் இன்னொருவர் "தெந்தனா ......தென, தெந்தன தெந்தன, ஓ!...— தெந்தனா ......தென, தெந்தன தெந்தன" என்று இராகத்துடன் பாடத் தொடங்கினான். மற்றவனும் அதேமாதிரிப் பாடினான். பின்னர் ஒன்பது பேரும் பாடினர். அடே! அப்பா மதுகணம் வயல் முழுவதும் வெட்டி முடிந்தது. இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு மிகுந்த ஆனந்தம் உண்டாயிற்று.

உண்மையில் இவ்வகையான நாட்டுப் பாடல்கள் மக்களுக்கு ஊக்கத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கின்றன.

## புதிய மருமக்கள்

மே.475. ஆர். கண்ணபிரான், 4301 கீழ 2-ம் வீதி, புதுக்கோட்டை, திருச்சி.

மே.476. அ. பெரியசுவாமி, அரசினர் உயர்தரப்பள்ளி, மேலைக்கடை வீதி, பூண்டு லோயா.

மே.477. க. இராமநாதன், நவாலி வடக்கு, மானிப்பாய்.

மே.478. அ. இரகுநாதன், நவாலி வடக்கு, மானிப்பாய்.

கி.479. த. துரைசிங்கம் சித்திரை மேழி, இளவாலை.

## மாமா பதில்

மே. 429. கு பத்மாவதி உமது கடிதம் கிடைத்தது மாமி சுகமாக இருக்கின்றார். உமக்கு எவ்வளவு புழுக்கொடியல் வேண்டுமெனத் தெரிவிக்கவும்.

மே. 394. த. ஜெயலட்சுமி பெண்கள் முன்னேற்றம் என்ற உமது கட்டுரை மிக நன்று.

மே. 104. எஸ். சப்தகிரீஸ்வரசர்மா: 'பாரதியும் தமிழ் மறுமலர்ச்சியும்' என்பது பற்றி அழகாக எழுதியிருக்கின்றீர்.

## எங்கள் ஊர்

மே.475. ஆர். கண்ணபிரான்

எங்கள் ஊருக்குப் பெயர் புதுக்கோட்டை. இது இப்பொழுது இந்திய யூனியனுடன் ஐக்கியப்பட்டு விட்டது. இதற்காக நாங்கள் பெருமை கொள்ளுகிறோம். எங்கள் ஊரைச் சுற்றித்தான் தஞ்சை, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் முதலிய ஜில்லாக்கள் இருக்கின்றன.

எங்களூரில் குளங்கள், காடுகள், ஆறுகள் நிறைய உள்ளன. ஆறுகள் பல மாதங்கள் வரண்டிருக்கும். நகரில் குடிப்பதற்கென்று சுத்தமான இரு குளங்கள் உள்ளன.

இங்கு பல பாஷைகள் பேசுபவர்கள் வசிக்கின்றனர். பெரும்பான்மையாக இந்துக்கள் இவ்விடத்தில் வசிக்கின்றனர். ஒவ்வொருவரும் தம்மத ஆசாரப்படி நடந்துகொள்ளச் சாதனங்கள் உள்ளன.

இங்கு அரசினர் பள்ளிக்கூடங்களும் ஆரம்பப் பாடசாலைகளும், பெண்களுக்கென்ற தனிப் பள்ளிகளும் உள்ளன. மற்றும் பலதரப்பட்ட தொழில்களை யுடையவர்கள் இங்கு வாழ்கின்றனர்.

இவ்வூரில் வெள்ளிக்கிழமையன்று சந்தை கூடுவது வழக்கம். அச்சமயம் பக்கத்துக் கிராம விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பொருள்களைச் சந்தையில் வாங்கிச் செல்வர். எங்களுக்கருகிலுள்ள சித்தன்னவாசலில் சைனர்களின் குகைக் கோயில்களும் விக்கிரகங்களும் உள்ளன.

## புத்தி வந்தது

கி.459. ந. கனகசிங்கம்

கந்தனுக்கொரேயொரு மகன். அவன் பெயர் வேலன். அவன் சினேகிதர்களெல்லோரும் துட்டர்கள். இதனைக் கந்தன் அறிந்து வேலனுக்குப் புத்தி கூறினான். 'துட்டரின் சினேகம் கூடாது; அவர்களுடன் சேர்ந்தால் நீயும் துட்டனாகி எல்லோராலும் இகழப்படுவாய்; அவர்களுடன் சேராதே' என்றான். வேலனா கேட்பவன்? அவன் அவர்கள் நட்பை விடவில்லை, அவர்களுடன் திரிந்தான். ஊர்ச்சனங்களெல்லாரும் வேலனின் துட்டச் செயல்களைப் பற்றிக் கந்தனிடம் கூறினார்கள். கந்தனுக்கு அளவில்லாத துக்கம்.

கடைசியாக ஒரு யோசனை தோன்றியது. கொஞ்ச மாங்காய் வாங்கினான். 'நாளைக்கு இவை யெல்லாவற்றையும் நீ எடுக்கலாம்' என்று வேலனிடங் கூறினான். வேலனுக்குச் சந்தோஷமாக இருந்தது. கந்தன் தான் வாங்கிய பழங்களுக்கு நடுவே அழுகிய பழமொன்றை வைத்தான். அடுத்த நாள் வேலன், 'பழங்கள் அழுகிவிட்டனவே' என்று தந்தையிடம் கூறினான். கந்தன் உடனே தான் செய்தவற்றை இவனிடம் கூறி நல்லவர்கள் கெட்டவர்களுடன் கூடினால் அப்படித்தான் கெட்டுப்போவார்கள் என்றான். வேலனுக்குப் புத்தி வந்தது. இதன் பின்னர் துட்டரின் சினேகிதத்தை விட்டு நல்லவனாக வாழ்ந்து வந்தான்.

## எனது பாடசாலை

கி.37. சி. கனகரத்தினம்

எனது பாடசாலை சுன்னாகத்தைச்சேர்ந்த கந்தரோடையில் இருக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியாகும்.

இக் கல்லூரியில் எழுநூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் படிக்கின்றார்கள். இருபத்தைந்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கல்வி பயிற்றுகின்றார்கள், எமது ஆசிரியர்கள் யாவரும் பிள்ளைகளிடம் அதிக அன்பு காட்டிக் கவனமாகக் கல்விகற்பிக்கின்றார்கள். எமது அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஆசிரியர்களதும், மாணவர்களதும் மனங்கோணாதபடி நடக்கின்றார். அவர் பிள்ளைகளிடம் மிகவும் அன்புள்ளவர்.

எனது வகுப்பாகிய மூன்றாம் பாரம் 'B' பிரிவில் ஒவ்வொருவாரமும் மாணவர் சங்கம் தவறாது கூடுவது வழக்கம். ஒரு வாரத்தில் ஆங்கிலத்திற் கூட்டமும், மறுவாரத்திலே தமிழ்க் கூட்டமுமாக நடைபெறுகின்றது. ஆங்கிலச் சங்கத்திற்குக் காரியதரிசியாக எனது நண்பன் அ. சிவசுந்தரமும் தமிழ்ச் சங்கத்திற்குக் காரியதரிசியாக நானும் கடமையாற்றுகிறோம்.

எங்கள் கல்லூரி சென்ற வருடம் நடைபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரிகளின் கால்பந்தாட்டப் போட்டியில் 'B' பிரிவில் முதலாவதாக வந்தது போற்றத்தக்கது. எங்கள் கல்லூரி வளர்ச்சியுற்று வருகின்றது.

### பிறந்ததின வாழ்த்துக்கள்

1-4-51—7-4-51

மே.111. சு. வேலாயுதம், மே.132. வே. கணபதிப்பிள்ளை, மே.154. போ. ஜெயசீலன், மே.155. சி. பரஞ்சோதி, மே.183. இ. பாக்கியராசா, மே.240. பூ. ஜோ. ஜெயராஜ். மே.275. க. ஜோர்ஜ், கி.304. வே. தம்பித்துரை, மே.306. மூ. கனகரத்தினம், மே.336. ஆ. சிவக்கொழுந்தன், கி.479. த. துரைசிங்கம்.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

### ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

..............................

பிறந்ததிகதி: ..............................

..............................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

★ பொருட் செலவுதான் ஏற்பட்டாலும் ஊர் வம்புக்காளாகாது இருக்க வேண்டும். அல்லாவிடில் இருக்கும் சரக்குக்கு மானம் குறைந்துவிட்டால் அது இன்னுமோர் பேரிடியல்லவா?

# அன்னம்

**அன்னம்** இன்று ஒரு பணக்காரி. பணம் இருந்தால் வாழ்க்கை இனிமை என்ற அர்த்தமா? அப்படியானால் அவள் ஏன் அழுதவண்ணம் தன் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ளவேண்டும்? நல்ல வேளையாக அப்படியில்லை. இன்று மண்ணைக்கூடக் கயிறாகத் திரித்தாவது பொருள் தேட முன்னிற்பார்களே நம்மவர். இதனால்தான் போலும் சர்வ சக்திபடைத்த பணத்துக்கு இச் சக்தி இல்லாமற் போய்விட்டது. இன்பந்தான் கொடுக்காவிட்டாலும் இன்பத்துக்குப் பதில் துன்பம் கொடுக்க வல்லது பணம். பலர் தமது வாழ்க்கையிற் கண்டு கொண்ட முடிவைத்தான் அன்னமும் தன்வாழ்வில் கண்டாள். "குடை நிழலிருந்து குஞ்சர மூர்ந்தோரே" சனீஸ்வர பகவான் கிருபையால் 'தாடி வளர்த்திட்டோ சன்னாசி யாய்விட்டோ' என்று நாடகமாடும் பொழுது அன்னம் மாத்திரம் கண்ணீருக்கும் கம்பலைக்கு மிடையில் வாழ்விழந்த அபலையாக வாழ்வதில் ஆச்சரியம் இல்லையே. ஆனால் பலரும் தமது அநுதாபத்தைத் தெரிவிப்பார்களே யொழிய அவளுக்கு உதவி செய்வாரில்லை. உலகில் ஒவ்வொருவரும் கஷ்டப்படும்போது தான் அநுபவித்த கஷ்டம் மற்றவர்களுக்கு இல்லை யென எண்ணுகிறான். இவ்வாறுதான் நமது அன்னமும் எண்ணிஎண்ணிக் கண்ணீர் வடிக்கிறாள். இவ் வெண்ணத் தொடர்பை வெட்டித் தீர்க்கத் தானோ—என்னவோ—"பாலுக்குச் சர்க்கரை இல்லை யென்பார்க்கும், கூழுக்கு உப்பில்லை யென்பார்க்கும் துன்பம் ஒன்றே"யென்றோர்பழையபல்லவி நாட்டிடை வழக்கில் இருக்கின்றது. என்னென்ன சொன்னாலும் அன்னம் துக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

ஒரு நாளா? இல்லை; மாதக் கணக்காய் அவள் கண்ணீர் பெருக்குகிறாள். தான் தன் கணவனை எவ்வாறெல்லாம் நடத்தினாள் என்பதை எண்ணும்போது, அவளென்ன? நாமும் அழத்தான் வேண்டியிருக்கிறது. இப்படி அழுவதைத் தவிர அவள் செய்த பழிக்குப் பிராயச்சித்தம் வேறுயாதோ? பாழ்பட்ட சமூகமே! கொலை செய்தவனைக் கொன்று குவிப்பதால் என்ன பயனைக் கண்டாய்! சின்னஞ் சிறுசுகள் அறியாப் பருவத்துப் பருவக் கோளாறினால் அறிந்தோ அறியாமலோ—நன்மையோ—தீமையோ செய்துவிட்டாள். இப்படியானமுடியையா என்மீது நீ சூட்ட வேண்டும். அப்பப்பா! அவள் என்னென்ன வெல்லாமோ எல்லாம் சொல்லி அழுதுகொண்டிருக்கிறாள்.

* * *

குளம் வெறுங் குளந்தான். அதன்சூழலில் பண்டாரச் சந்ததிகளாவது அன்றேல் வேறெவராவது குடியிருக்காதபோதும் அக் குளம் மட்டும் பண்டாரக்குளம் என்றே அழைக்கப் படுகின்றது. குளம் சூழ்ந்த வயல்வெளி யென்று சொல்லுமளவிற்கு வயல் இல்லாவிட்டாலும் வைக்கோல் விளையும் வயல் இருக்கின்றதென்றே சொல்லலாம். இவ் வயலருகே உள்ள ஓர் இடத்திலேயே—இல்லை ஓர் வீட்டிலேயே—அன்னமென்ன அவளது சகோதரரென்ன பிறந்தார்கள். கொட்டில் வீட்டுப் பிள்ளை யென்று சொல்ல முடியாது. பல பிள்ளைகள் இருந்தும்—தாய் தகப்பன் அன்னத்தின்மேல் ஒரு கண் வைத்தே வளர்த்து வந்தனர்.

அன்னத்தின் தந்தை இராமு பழைய மனிதன். காலையில் எழுந்து குளக்கரைத் தரிசனம் செய்து முகம் கழுவிப் பட்டை பட்டையாகத் திருநீறு அணிந்துகொண்டு கையிலே தடியுடன் காட்சி கொடுக்கும்போது சே! சிவனென்ன? அவன் மேலுக்கும் ஒருவன் இருந்தாலும் இவர் போல் வருமா என்று தோன்றும். "காணக்கண் ஆயிரம் வேண்டுமே" என்ற பாட்டு இச் சந்தர்ப்பத்துக்காகப் பாடப் பட்டது தானே. ஆள் பழையகட்டை யென்றாலும், பட்டைக்கார னென்றாலும் புதிய நடை தாளம் போடுபவர். அல்லாவிட்டால் வாழ்க்கை வண்டியில் ஒரு மாட்டையே கட்டி யவிழ்க்கக் கஷ்டப்படும்போது வாழ்க்கை வண்டியை இரண்டுமாட்டு வண்டியாக்கிக் கட்டியவிழ்ந்ததோடு மாத்திரமா? அதில் வெற்றியும் கண்ட மனிதனென்றால் புதிய நடைக்காரன் தானே.

இக்காலத்திலேதான் 'படிக்கிறது தேவாரம் இடிக்கிறது சிவன்கோயில்' வழக்கமென்று யாராவது தடுமாறியாவது சொல்லாது பழைய காலவழக்கம் தானையா இதுவென்பதை அவர் நடை, உடை, பாவனை தெளிவாக்கிவிடும். எப்படி இருந்தாலும் இராமு முருகப் பெருமான் வேடத்திலே—ஏன் அவர் செயலென்றுகூடச் சொல்லலாம்—வள்ளி தெய்வானைக்குப்பதில் பிள்ளையையும் மாணிக்கத்தையும் மணந்துகொண்டார். எவனொருவனிடத்து நல்ல குணமொன்று கூட இருக்கிறதோ அவனிடத்துத் தீய குணமொன்றும் கூடிய நிலையில் இருக்கத் தானே செய்யும் என்னும் கொள்கையர் நமது இராமபிரான். திருடனிடத்தும் ஒருவர் அநுதாபம் காட்டுவார். இன்னொருவர் தனது வன்மை அல்லது புகழைச் செலுத்துகிற—சேகரிக்கின்ற — இடம் இதுதான் என்று கொள்வார்: உலகம் பலவிதம்.

அரசன் ஆண்டியாவதும், ஆண்டி அரசனாவதும் மனத்தின் கோலத்தினால் ஏற்படும் விசித்திரங்கள்தாமே! நமது வாழ்க்கையே காலத்தோடு தொடர்புடையதுதானே என்றும் சாதிக்கின்றார்களே. எப்படி யானாலும் அன்புக்குப் பத்திரமாயிருப்பவரே அக் குலத்துக்குக் கோடரிக் காம்பாக மாறுவதும் உண்டு. அல்லாவிட்டால் அன்னம்தான் பெற்றோரின் சீட்டை எடுக்கும் நிலைக்குக் காரணம் என்று நீங்களும் நானும் சொன்னாலும் தாய் தகப்பன் நம்புவதில்லையே. சோதிடனையும் நாம் சொன்னவுடன் நம்புவதில்லையே. பிறர்மேல் பழியைப் போடும்போது நம்புவதும், தன் தலைமீது சுமத்தப்பட்டால் வேலையற்றவன் குறி சொல்கிறான், அவனுக்குத்தான் வேலை யில்லையென்றால் அதைக் கேட்கிறார்களே இந்த மூடர்கள் என்று ஞானிபோற் கூறித் தட்டிக் கழிப்பதும் வழக்கம்.

எப்படித்தான் தட்டிக் கழித்தபோதும் வீட்டு நிலைமோசமாவதை அவர்கள் உணராமலில்லை. இன்பம் வரும்போது தொடர்ந்து வருவதும் துன்பமாகும் போது தொடர்ந்து ஏழரைச் சனீஸ்வரன் பிடிப்பதுபோல வாழ்க்கைநிலை மோசமாகிவிட்டது. இவ்வித கஷ்டத்தையும் பொருட்படுத்தாது மூத்த பெண்ணின் கலியாணத்தை முடித்துச் சந்தோஷப்பட்டார் இராமு. இவர் சந்தோஷத்துக்கு முற்

— பூபால் —

றுப்புள்ளி வைக்கும் நோக்கமோ—அன்னத்தின் கிரகசாரத்தின் விளையாட்டோ—யாரறிவார். ஒன்றுக்கு இரண்டாகத் தாயும் பிள்ளையுமாகப் பிறந்தகத்துக்குப்பொறுப்பாய் வந்து சேர்ந்தாள் மூத்த பெண் பாக்கியம். 'தாய்க்கொடிக்குச் சுரைக்காய் பாரமா' என்னும் மொழியைக் காப்பாள் போல ஒருவாறு நிலைமையைச் சமாளித்து வந்தாள். கால் உளைவு தாங்க மாட்டாதவன் காலை வெட்டிக் கானில் போடும் வழக்கமுண்டா? அப்படியானால் தலையிடி என்றால் தலையை வெட்டி எறிவதா? என்ன செய்வது நமது கஷ்ட காலம் என்று சொல்வதுதானே நமது குல மந்திரமாயிற்றே. சரி, பொருட் செலவுதான் ஏற்பட்டாலும் ஊர்வம்புக்காளாகாது இருக்க வேண்டும். அல்லாவிடில் இருக்கும் சரக்குக்கு மானம் குறைந்துவிட்டால் அது இன்னுமோர் பேரிடியல்லவா?

காலத்தின் தந்திரம் மூத்த மகளுடன் தான் நின்றுவிட்டதென்றால் அதுவும் சரிசெய்துவிட்டது. அன்னம் பெயருக்கேற்ப உருவில் அமையாததற்கு அவள் என் செய்வது? அப்பெயருக்கே அவமானத்தை உண்டாக்கவேண்டுமென்பது போலிருந்தது அவள் எழில். பார்ப்போர்—போவோர்—வருவோர் யாவரும் பரிதாபம் அநுதாபத்தைப் பார்த்துப் பாராமல் சொல்லித் தீர்த்தற்கும் இவ்வழகு உதவி செய்யாவிட்டால் அவர்கள் மனம் திருப்தி யடையாது விடுமா? அழகு அழகு என்று ஓலமிடுகிறோம். ஆனால் அழகென்றால் என்ன வென்று யாராவது கண்டுபிடித்திருக்கிறார்களா? அஃது எடை—பாகை மூலம் அளந்துதான் அறிய முடியுமா? பறக்கும் தட்டுகளையே ஆராய்ந்து அறியும் காலத்து அழகில் லட்சணத்தை ஆராயவில்லை யென்றால் அது ஆச்சரியம் மட்டுமா? —கலைகள் இன்னும் பூரணத்துவம் அடையவில்லை என்பதைக் காட்டாமற் காட்டத் தானே செய்கிறது. ஒருவர் ஒரு பொருளைப் பார்த்து இதைப் போல அழகு இல்லையென்றுசொல்லும்போது இன்னொருவர் அதே பொருளைப் பார்த்து இதென்ன ஐயா இதைப்போல அவலட்சணம் இல்லையே எனக் கூப்பாடு போடுகிறார். ஆகவே, அழகும் அவலட்சணமும் பார்ப்போரின் கண், மனநிலை, சந்தர்ப்பம், இடத்தில் தங்கி இருக்கும்போது அன்னத்தின் அழகைச் செல்லன் பருக ஆசைகொண்டதில் புதிதொன்றுமில்லையே.

"பொருளிலார்க் கின்பம் இல்லை" என்ற புண்ணியவான் பாடல் எவ்வளவு தூரம் உண்மையென்பதை நாம் உணர்ந்தது தானே! 'உத்தியோகம் புருஷ இலட்சணம்' என்னும் கொள்கை இன்றுவரை நிலவுகின்றது. வேலை வெட்டியிருந்தும் இல்லாது வீணராய் இடிந்த மதவுகளையே படிக்கட்டு ஆசனங்களாகவும், உல்லாசப் பொழுது போக்கு இடமாகவும் செலவிடும் பேர்வழிகளில் நமது செல்வனும் ஒருவன். "ஸ்ரீரங்கநாதனையும் தில்லைநடராஜனையும் பீரங்கிவாயில் வைத்துப் பிளந்தெறிவது எந்நாளோ" என்பன போன்ற சுவை கொட்டும் பாக்களுக்கும் பஜனைகட்கும் இவர்களிடத்துக் குறைவில்லை. இப்பாக்கள் இவர்களது வாயினின்றும் இயற்கையாகவே ஊற்றெடுத்தோடுவதாயின் அவர்கள் திறன் எழுத்துள் அடங்கும் என்பது வீண் பிரேமை.

அன்று ஒரு சனிக்கிழமை; மறு வாரங்களைப் போலன்றி அவ்வாரம் நமது மதில்மேல் மன்னரிடையே பரபரப்பை உண்டாக்கிவிட்டது. இதற்கெல்லாம் காரணம் இராமரின் திடீர் மரணம்தான். இப்படியான இழவு வீடுகளில் தானே நமது மதிலாசனச் சகோதரருக்கு வரவேற்புக் கிடைக்கிறது. ஆகவே செல்வன் அன்று ஓடியாடி வேலை செய்ததற்கு வேறுகாரணம் இல்லையென்றும் கூறலாம். அன்றே அவன் ஊராரின் கண்ணில் பாராட்டைப் பெற்றதுமன்றி கூடத்தில் மறைந்திருந்த அன்னத்துக்கும் அவன்மேல் அன்றிலிருந்தே ஒரு கண். இந்தக் கண்கள் இருக்கின்றனவே, அப்பப்பா என்னென்ன, வேடிக்கை. கருத்துக்களை யெல்லாம் மௌனவிரதத்தில் சாதித்து விடுகின்றன. செல்வத்தின் கண்கள் மட்டும் அன்னத்தைக் காணவிட்டாலும் அன்னத்தின் அத்தான் சபாவுடன் உறவுவைத்துக் கொண்டது. ஆண் ஒரு ஆணின் உறவை ஏன் கண்ணால் சம்பாதித்துக் கொள்ளக் கூடாது. இது புதுமை மலிந்தகாலம் தானே! அன்றிலிருந்து வளர்ந்த சிநேகம் பனையடி வளவிற்குப் போவதினாலும் சரி உலாத்திலாவது இருவரும் ஒருவரை ஒருவர் இணைபிரிவதைக் கஷ்டமாக்கிவிட்டது.

இதற்கிடையில் இராமன்னரின் புகழ் மேலும் பரவிவிடுமென்று நினைத்துப் போலும் காலபகவான் அவரை ஏற்றுக்கொண்டான். ஆயிரமாயிரமாக இருந்தாலும் மூத்தமனைவியும் இளையமனைவியும் புருடன் இருக்கும் வரை தானே ஒற்றுமை. அதுபோலவே இருவர்க்கு மிடையிலே உண்டாகிய தகராறு அன்னமும் சகோதரர்களும் அவ் வீட்டிலிருந்து விடுமாறும் பலனாக முடிந்தது. வீட்டுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இக்காலத்திலும் இவர்களை ஒரு வீடு வரவேற்றுபசரித்தது.

* * *

பலாலி ஒரு பழைய இடம். இல்லை; ஸ்தலம் என்றே சொல்லலாம். இப்பூமி மேனிலையடைய வேண்டுமென்று சொல்லி வைத்தது போல வந்து சேர்ந்தது இரண்டாவது உலக மகா யுத்தம்.

அடியார்கள் அவஸ்தைப் படும்போது எமது பிரானடிகள் தோன்றி அபய மளிப்பது போலப் பாழ்பட்ட நிலையிலிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பஞ்சம் போக்கிச் சோற்றுப் பருக்கைக்கு வழிகாட்டி உதவி அளிக்கும் நிலைக்கு வந்துவிட்டது பலாலி. வீட்டோடு உண்டுகளித்துஉறங்கிக்கிடந்த சபாரத்தினத்துக்கும் நீல நோட்டுகளை அயலவர் சுகமாகச் சேமிப்பதைப் பார்த்துத் தானும் சேகரிக்க வேண்டுமென்று ஆசை எழாமலில்லை.

சபா இச் சந்தர்ப்பத்தைத் தான் மாத்திரம் அநுபவிக்க விரும்பவில்லை. இப்படியான சில சந்தர்ப்பத்திலாவது நம்மவர் சிலர் சிநேகம் காட்டுவதே கார்த்திகைப் பிறை கண்ணுக்குத் தெரிவது போலவேயாகும். ஆனால் மதகு கவலைப் படுமென்று நினைத்தோ—நண்பர் கூட்டத்தைப் பிரிய மனமின்றியோ — என்னவோ செல்லன் வேலை வேண்டாமென்று ஒரே மூச்சில் பேச்சுவாக்கில் கூறிவிட்டான்.

ஆசிரியப் பொறுப்பு நிறைந்தனம் பத்திரிகைகளை நாம் சொல்வதற்கு மாறாக நடந்துவென்றும்போது, செல்லனை சபாவுடன் பலாலி வேலைக்குப்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக வெளியீடு

எஸ். எஸ். ஸி. வகுப்புக்குரிய

அரிச்சந்திரபுராணம்

மயானகாண்டம்

பதவுரை, விரிவுரை, இலக்கணக் குறிப்புக்களுட

விலை ரூபாய் 1-00 : : தபாற் செலவு -/35 சதம்

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கப்பெறும்.

தனலக்குமி புத்தகசாலை : சுன்னாகம்

*The*
# EeLAKESARI

T'Phone No. 805

NATIONALIST TAMIL WEEKLY

Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union

Vol. 21 | Chunnakam, Sunday, Apr., 1, 1951 | No. 35

**சந்தா விபரம்**

ஆண்டுச் சந்தா :
இலங்கை-இந்தியா ரூ. 6·00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 3064

**பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டுப் பிரிவிடல் வழக்கு**

அல்வாய் மேற்கு,
1. வேலாயுதர் பெரியதம்பி
2. கதிரவேலு வல்லிபுரம்
3. பெண் செல்வமலை

வழக்காளிகள்

Vs

பொலிகண்டி தற்போது கோப்பாய்: 1. S. நாகலிங்கம், 2. பெண் தங்கம்மா; பொலிகண்டி: 3. சிதம்பரப்பிள்ளை செல்லையா, 4. பெண் செல்லமுததது, கரணவாய் வடக்கு: 5. பொன்னையா நடராசா, 6· பெண் தங்கமணி; பொலிகண்டி: 7. சின்னத்தம்பி தில்லையம்பலம், 8. பெண் சின்னக்குட்டி; (மரணம்) 9. சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்; அல்வாய் மேற்கு: 10. சின்னவன் குஞ்சன், 11. கந்தையா கணபதிப்பிள்ளை, 12. கதிர்காமர் மயில்வாகனம், 13. பெண் சின்னாச்சி, 14. வேலர் மகள் இலட்சுமிப்பிள்ளை, (மரணம்) 15. நாராணர் சின்னையா கைம்பெண் சின்னாச்சி, 16. வல்லியப்பர் வேலுப்பிள்ளை, 17. அம்பலவி வேலுப்பிள்ளை, 18. பெண் அன்னம்மா, 19. வேலர் கந்தையா, கைம்பெண் சின்னாச்சி, 20. வல்லியப்பர் மகள் பெரியநாச்சி, 21. கணபதிப்பிள்ளை வல்லிபுரம், 22. பெண் வள்ளிப்பிள்ளை, 23. K. சிதம்பரப்பிள்ளை, கைம்பெண் வள்ளிநாச்சி, 24. சின்னவன் குஞ்சன் பெண் நாகி, 25. நாகன் கிருஷ்ணன், 26. S. வேலுப்பிள்ளை, 27. S. இராசையா, 28. S. சுப்பிரமணியம், 29. சிதம்பரப்பிள்ளை கணேசு, 30. பெண் அன்னப்பிள்ளை, 31. கணபதிப்பிள்ளை சண்முகம், 32. பெண் மாணிக்கம், 33. சின்னத்தம்பி கைம்பெண் வள்ளிப்பிள்ளை, 34. கந்தையா வல்லிபுரம், 35. கதிரித்தம்பி பொன்னுத்துரை, 36. பெண் தெய்வானை, 37. கந்தையா கதிர்காமர், 33. பெண் பசுபதி

எதிரிகள்

மேற்குறித்த இலக்கப் பிரிவிடல் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் 1951-ம் ஆண்டு சித்திரை மாதம் 25-ந் திகதி புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 6 கண்டங்களாகவும் பாதைக்காக விடப்பட்ட கண்டம் 7-ந் துண்டாகவும பிரிக்கப்பட்டு, அவ்வவ்வாதனங்களிடமாகவிருந்து, மதிப்புத் தொகையிற் தொடங்கி முதலாவதாகப் பங்காளருக்கிடையிலும் அவர்கள் வாங்கத் தவறினல் உடனே அந்த இடத்திலேயே பிரசித்த ஏலத்திலும் என்னால் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று மனவராய குறிச்சி அல்வாய், தம்பியப்புலம், என்னும் காணி நிலப்பரப்பு. 26, குளி $14\frac{2}{32}$ அதற்குட்பட்டவையும் A, B, C, D, என்று காட்டப்பட்ட வீடு கொட்டில்களும், 1948-ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ந் திகதி உலாந்தா மேஸ்தர் ப. சிவரத்தினமவர்களால் 614-ம் இலக்கத்தில் விஸ்தாரிக்கப்பட்டுள்ளது. தற்போது அதே உலாந்தா மேஸ்தரால் 1951-ம் ஆண்டு பங்குனி மாதம் 13-ந் திகதி 991-ம் இலக்கப் படத்தில் 6 கண்டங்களாகவும் பாதைக்காக ஒரு துண்டு 7-ந் துண்டாகவும் பிரிக்கப்பெற்றுள்ளது. இதற்கு எல்லை கிழக்கு, 1-ம் வழக்காளிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு, முருகர் தம்புவும் மறு. மேற்கு, கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளையின் [illegible]மைக்காரரும் மறு. தெற்கு, [illegible]த்திகேசர் சிதம்பரப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவைகளில்

1-ம் கண்டம். நிலப்பரப்பு 4. $17\frac{8}{32}$ குளி எல்லை கிழக்கு, இதில் 2-ம் கண்டம் வடக்கு, முருகர் தம்புவும் மறுபேரும் மேற்கு, கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளையின் உரிமைக்காரரும் மறுபேருக்கும் தெற்கு, இதில் 6-ம் கண்டம் இது மதிக்கப்பட்ட விலை 7-ம் துண்டாகிய பாதையின் உரித்துக் கிரையத்துடன் ரூபா 1196-70.

2-ம் கண்டம்: நிலப்பரப்பு 5. 0 குளி எல்லை கிழக்கு, இதில் 3-ம் கண்டம் வடக்கு முருகர் தம்புவும் மறுபேரும் மேற்கு, இதில் 1-ம் கண்டம், தெற்கு, இதில் 7-ம் 5-ம் கண்டங்கள் மதிக்கப்பட்ட விலை 7-ம் துண்டாகிய பாதையின் உரித்துக் கிரையத்துடன் ரூபா 1091-91.

3-ம் கண்டம்: நிலப்பரப்பு 5. குளி $05\frac{12}{32}$ எல்லை கிழக்கு, 1-ம் வழக்காளிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு, முருகர் தம்புவும் மறுபேரும் மேற்கு, இதில் 2-ம் கண்டம் தெற்கு, இதில் 7-ம் 4-ம் கண்டங்கள் மதிக்கப்பட்ட விலை 7-ம் துண்டாகிய பாதையின் உரித்துக் கிரையத்துடன் ரூபா 1009-23.

4-ம் கண்டம். நிலப்பரப்பு 3 குளி $02\frac{29}{32}$ எல்லை கிழக்கு 1-ம் வழக்காளிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு இதில் 3-ம், 7-ம் கண்டங்கள், மேற்கு இதில் 5-ம் கண்டம், தெற்கு கார்த்திகேசு சிதம்பரப்பிள்ளையும் மறு. மதிக்கப்பட்ட விலை 7-ம் துண்டாகிய பாதையின் உரித்துக் கிரையத்துடன் ரூபா 660-09.

5-ம் கண்டம்: நிலப்பரப்பு 3 குளி $13\frac{29}{32}$ எல்லை கிழக்கு இதில் 4-ம் கண்டம், வடக்கு இதில் 2-ம், 7-ம் கண்டங்கள், மேற்கு இதில் 6-ம் கண்டம், தெற்கு கார்த்திகேசு சிதம்பரப்பிள்ளையும் மறு. இது மதிக்கப்பட்ட விலை 7-ம் துண்டாகிய பாதையின் உரித்துக் கிரையத்துடன் ரூபா 870-48.

6-ம் கண்டம்: நிலப்பரப்பு 4 குளி $04\frac{21}{32}$ எல்லை கிழக்கு இதில் 5-ம் கண்டம், வடக்கு இதில் 1-ம் கண்டம், மேற்கு கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளையின் உரிமைக்காரரும் மறு, தெற்கு காத்திகேசு சிதம்பரப்பிள்ளையும் மறு. மதிக்கப்பட்ட விலை 7-ம் துண்டாகிய பாதையின் உரித்துக் கிரையத்துடன் ரூபா 824-24:

7-ம் கண்டம் நிலப்பரப்பு 0 குளி $05\frac{31}{32}$ எல்லை கிழக்கு 1-ம் வழக்காளிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு 2-ம், 3-ம் கண்டங்கள், மேற்கு இதில் மூன்றும் கண்டம், தெற்கு இதில் 4-ம், 5-ம் கண்டங்கள் விலை மதிக்கப்பட்ட தொகை ரூபா 41-45.

இந்தத்தொகை மேற்காட்டிய 6 கண்டங்களின் கிரயத்தின் சம பங்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறது மொத்த விலை ரூபா 5652-65.

Alfred A. Sundaram
Auctioneer &
Commissioner of Sales

Thumpalai
Point-Pedro
13-3-51 [4278]


## வாலாஜாபாத் இந்துமத பாடசாலை

**சமயத் தலைவர்கள் விஜயம்**

சைவசித்தாந்தத்திற் பேராசிரியர்களாக விளங்கும் முத்தமிழ்ப் பெருஞ் சொற்கொண்டல், புரிசை. சு. முருகேச முதலியார் அவர்களும், தாம்பரம், பு. சமாபுரி முதலியார் அவர்களும், ஆரணி. தமிழாசிரியர் முத்து சு. மாணிக்க வாசக முதலியார் அவர்களும் சென்ற வாரத்தில் பாடசாலையையும் மாணவர் இல்லத்தையும் பார்வையிட்டனர். பாடசாலைச் செயலாளர் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் யாவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## அன்னம்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

போனதில் தவறில்லை. ஒருவேளை சபாவின் சாமர்த்தியம் என்று யோசிக்கிறீர்களோ? அதைப்பற்றி என்னிடம் மட்டும் கேட்காதீர்கள்.

சபா அன்னத்தின் தமக்கை புருஷன். இன்று சொல்லளவில் மாத்திரமல்லச் செயலிலும் ………… கலியாணம் கட்டிய ஓராண்டுள் மனைவிக்கு மாத்திரமன்றி மகனுக்கும் பெற்றோர் சாப்பாடு போடும்படி செய்துவிட்டு ஓடியவன். ஓடியவன் மனைவியின் மீது அன்றேல் பிள்ளைமீது கொண்ட பாசத்தால் திரும்பியவனன்று. சோற்றுக்கு வழியில்லாமல் வந்தவனேதான். புருடன் மனைவி சண்டைச் சமாச்சாரச் சாடு இப்படிப்பட்டதுதானே!

புது வீட்டிலே முதலாளி சபா. நன்மைக்கும் தின்மைக்கும் இன்று அவன் ஆளாக வேண்டியிருந்தது. கப்பு ஒன்று நின்றால் வளையின் பாரம் பொறுக்கத்தானே செய்கிறது. சபா ஊராரின் கண்களுக்கு நல்லவன். ஆனாலும் நல்லவனிடத்தும் ஒரு தீய குணம் இருப்பதுபோல இவனும் ஒரு பெண்லோலன். இந்நிலையில் அவன் குரங்கு மனம். அன்னத்தின் மீதும் தாவியதில் வியப்புமில்லை. தவறுமில்லை. அன்னம் மட்டும் என்ன? அவளுக்கு மட்டும் இளமைத் துடிப்பு இல்லையா? அதனால் அவள் அதை வெறுக்கவாவது - காரியத்தை வெளியிடவாவது விரும்பவில்லை. பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடித்தால் விஷயம் மற்றவர்களுக்குத் தெரியாமலா போய்விடும். அன்னம் அத்தானுடன் மச்சானுறவை வளர்த்து வந்தபோதும் அவளுக்கு-ஏன் அவனுக்கும்தான்-உள்ளூரப் பயம் ஒன்றும் வளர்கதே வந்தது.

உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூட இயலாது. அணுக்குண்டு இரகசியமே பாகசியமாயிருக்கும்போது; சபாவின் சாமாச்சாரம் எப்படியோ எங்கும் எட்டிவிட்டது. இனியும் பார்த்துக்கொண்டிருந்தாற் காரியம் கெட்டுவிடும். அத்துடன் சாக்குக்கும் மானம் போய்விடுமென்றுணர்ந்த சபா உடனடியாகவே அன்னத்தின் கலியாணத்துக்குத் தயாரானன். இவற்றுள்ளும் அவன் மனம் சதியாலோசனை செய்தது.

ஏதோ பலத்த யோசனை செய்துகொண்டிருக்கும் போது அவனுடைய மனம் அவனைப்பார்த்து, "என்ன யோசனை பலமாக இருக்கிறதே! உன் நண்பன் செல்லனை மறந்த யோசனை" என்று இடித்துப் பரிகசிப்பதுபோலிருந்தது. அவனுக்கு மனத்துள் புத்தியை அவன் கைவிடும் தருவாயிலில்லை. கைவிட்டால் கரையேற்ற- கரையேற வேறு வழிவேண்டுமே. நடுக்கடலில் தத்தளிக்கும்போது துரும்பு அகப்பட்டாலும் அது பெருநதி அல்லவா?

சபா எடுத்துக்கொண்ட காரியம் நடைபெறாமல்விடுமா? செல்லனின் சம்மதமுங் கிடைத்தது. அன்னம் முன்னரே செல்லன் மேலும் ஒருகண் வைத்தவளாயிற்றே. அன்று வைத்த குறி இன்றுதான் தைத்தது. அத்துடன் சபாவும் நல்ல பெயர் சம்பாதித்துவிட்டான். நீங்கள் மாத்திரம் செல்லனைக் கண்டால் விஷயத்தைச் சொல்லிவிடாதீர்கள். குடியைக் கெடுத்த பாவத்துக்காளாவீர்கள்.

## அளம்பில் சனசமூக நிலையம்

**வாசிகசாலைத் திறப்பு விழா**

சென்ற செவ்வாய்க்கிழமை (20-3-51) அளம்பில் சரித்திரத்திற் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டிய சம்பவம் நடைபெற்றது.

அன்று கிராமவாசிகளின் சொந்த முயற்சியால் அமைக்கப்பெற்ற சனசமூக நிலைய வாசிகசாலையை மந்திரி பண்டாரநாயகா திறந்துவைத்தார். மந்திரியவர்கள் கொக்கிளாய் விருந்து வவனியாப் பிரதிநிதி திரு. சுந்தரலிங்கம் அவர்களுடன் வந்துசேர்ந்தார். கி. மூ. ச. காரியதரிசியும் உபதபாற்கந்தோர்த் தலைவருமாகிய திரு. எஸ். பிகோறி அவர்களால் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

மந்திரியவர்கள் இக் கிராமத்தின் குறைகளை நிவர்த்திக்கத் தம்மாலான உதவி செய்வதாக வாக்களித்துத் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி கூறினர்.

## செந்தமிழ் வளர்த்த தேசபக்தன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு நிலையான ஒரு அழகிய மண்டபத்தை உதவி அதன் தலைவராயிருந்து இறுதிவரை சேவை செய்தார்.

தமது முயற்சியால்தேடிய பணத்தை 'உவர்க் கடலன்ன செல்வமாக்காது கிணற்றூற்றன்ன செல்வமாக்கி'—'ஊருணியாக்கி'ப் பொதுஸ்தாபனங்களுக்கு ஈந்தார்.

புலவர்களை ஆதரித்தலிலும், தமிழை விருத்தி செய்தலிலும், எழுத்தாளர்களை ஆதரித்தலிலும் ஈழநாட்டுக்கு ஒரு வழிகாட்டியாயினர்.

இவரது சேவையை உணர்ந்த அரசாங்கத்தினர் இவரை 1950-ம் ஆண்டு ஒரு சமாதான நீதிபதியாக்கிக் கௌரவித்தனர்.

கடந்த சில மாசங்களாக நோய்வாய்ப் பட்டிருந்து 30-3-51 காலை 4-30 மணிக்குத் தமது அருமைப் பத்தினி மீனாட்சி யம்மையும் ஏக புத்திரி புனிதவதியும் உறவினரும் நண்பர்களும் வருந்துமாறு இவ்வுலக வாழ்வை நீத்தனர்.

அவரது ஆன்மா சாந்தியடைவதாக!

சுபம்.

## திருக்கேதீசுவரத்தின் மகிமை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியிலுள்ள பசும்புற்றரை றபோல் விளங்குகின்றது. இத் திருமடத்தில் பங்குனிப் பகலவன் உக்கிரமான கிரணங்களை வீசும் உச்சிக் காலத்திலே ஐஞ்ஞூற்றுக்கதிகமானோர்க்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணர் திருக்கேதீசுவர ஆலயத் திருப்பணிச் சபையினரே. இவர்களில் இச்சபைக் காரியதரிசி திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்களும், மன்னார் அரசினர் வைத்தியசாலை டொக்டர் அரியரத்தினம் அவர்களும், மாங்தைத் திறையதிகாரி அவர்களும், திரு. செல்லப்பாச் சுவாமி யவர்களும், இதைச் சேர்ந்த மற்றும் பிரமுகர் பலரும் சமூகமாயிருந்தனர்.

### திருப்பணி

இத் திருமடத்தில் மாலை 2-30 மணியளவில் திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் முன்னுரையின்பின் சைவாசிரியகலாசாலை அதிபர் திரு. சி. சுவாமிநாதன் பி. எ. அவர்கள், திருக்கேதீசுவரத்தின் பழமையும் அப்பழமையை நாமெல்லாம் போற்றவேண்டுமென்பதையும் கூறி, இத் தேவாலயத் திருப்பணிச்சபையாரைப் பெரிதும் பாராட்டினர். அதன்பின் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதர் சு. இராசையா அவர்கள், இத் தேவாலயப் பெருமையையும் அதற்கேற்ற திருமடத்தின் பெருமையையும், அங்கு நடக்கும் அன்னதான உயர்வையும் எடுத்துக்கூறி ஒவ்வொரு சைவனும் "என் கடன்பணி செய்துகிடப்பதே" என்னுங் குறிக்கோளுடன் வாழவேண்டுமென்றும், பணிகளுட் சிறந்தது தேவாலயப் பணியே என்றும் விளக்கிக் காட்டினர். பின்னர் சைவாசிரியகலாசாலை மாணவருள் மூவர் ஆலய வழிபாடு, தேவாலயத் திருப்பணி, அன்னதானச்சிறப்பு என்னும் விடயங்கள்பற்றிச் சொற்பொழிவாற்றினர். தலைவர் தமது முடிவுரையில், இக்கலாசாலை மணவர்களின் வரவு தமக்குப் பெருமுவகையைத் தருகிறதென்றும், இவ்விதமே ஒவ்வொரு சைவரும் இங்கே வரவேண்டுமென்றும், இத் தேவாலயத் திருப்பணிக்கு ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு கிளைச்சபை ஸ்தாபிக்க வேண்டுமென்றும், இப்பணியில் யாவரும் ஈடுபட வேண்டுமென்றும் கூறினர்.

அதன்பின் ஆசிரிய கலாசாலையினர் அநுராதபுரிக்குப் புறப்படலாயினர்.

**இப் பத்திரிகையில் வெளியாகும் ஊாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.**

யாழ்ப்பாணம் - குரும்பசிட்டி; ஸ்ரீநாகன் நிலையம் ஸ்ரீமதி கா. பொன்னையா அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு ஏப்ரில் மீ 1உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப் பெற்றது.